# மனவளம் காக்கும்
# தீர்த்தங்கரரும்...

# மண்வளம் காக்கும்
# விருட்சங்களும்...


பூ. இரத்தினசபாபதி M.Sc., M.Phil.,

# நூல் அறிமுகம்

| | |
|---|---|
| *நூலின் பெயர்* | மன வளம் காக்கும் தீர்த்தங்கரரும்...<br>மண்வளம் காக்கும் விருட்சங்களும்... |
| *நூலாசிரியர்* | பூ.இரத்தினசபாபதி, M.Sc.,M.Phil., |
| *முதற் பதிப்பு* | 2019 |
| *பக்கம்* | 136 |
| *உரிமை* | ஆசிரியருக்கு |
| *பதிப்பு* | ஜெயின்ஸ் இந்தியா அறக்கட்டளை<br>சியாட் ஹவுஸ் 4 வது மாடி<br>961, பூந்தமல்லி நெடுஞ்சாலை<br>சென்னை 600 084<br>தொலைபேசி 044 4293 3300<br>044 4293 3333 |
| *கணினி வடிவமைப்பு* | ஸ்ரீராம் பதிப்பகம்<br>ஈரோடு |
| *அச்சிட்டோர்* | ஜோதி அச்சகம்<br>சென்னை 600 006 |
| *நன் மதிப்பு* | இந்தியாவில் ரூ 250, வெளிநாடு 4 $ |

நூலில் இடம் பெற்றுள்ள படத்தை
தகவல்களை அனுமதியின்றி
பயன் படுத்திக் கொள்வதும்,
மொழி மாற்றம் அல்லது வேறு விதத்தில்
எடுத்தாள்வதும் முறையல்ல

# வாழ்த்துரை



பேராசிரியர் முனைவர் க. ரத்தினம்
தமிழ் துறை (ஓய்வு)
2, வேலப்பன் நகர்
இந்திரா கார்டன் சாலை
கோயம்புத்தூர் – 641015
அலைபேசி : 90422 95655

மரங்களை வளர்ப்பது என்பது மகத்தான பணி தான். ஆனால், அதில் எந்த மரம் அதன் இயல்பு என்ன என்று குறித்து சொல்வது ஒரு பெரிய கலை. அந்த கலை பொக்கிஷத்தை எழுத்துக்களால் வடித்து, மரம், பூ, காய், இலை என அதன் அமைப்பையும் வடிவமைத்து நூலாக வந்துள்ளது. இந்த “மன வளம் காக்கும் தீர்த்தங்கரரும்... மண்வளம் காக்கும் விருட்சங்களும்...” என்ற அரிய புத்தகம்.

இந்த புத்தகத்தின் சிறப்பு அம்சம் எதுவெனில் திருக்கோயில்களில் தல விருட்சமாக கொண்டுள்ள மரங்களை வரிசை படுத்தி, தெய்வபணியையும் சேர்த்து செய்துள்ளார் திரு பூ. இரத்தினசபாபதி. இந்நூல் ஆசிரியர் அவர்களை நீண்ட நாட்களாக அறிவேன். மயிலாடுதுறை ஏ.வி.சி கல்லூரியில் முதுகலை வகுப்பில் பயின்று பட்டம் பெற்ற அவர் பல அரிய சாதனைகளை நிகழ்த்தியுள்ளார்.

அவற்றுள் குறிப்பிடத் தக்கது பள்ளி, கல்லூரி மாணவர்கள் பல தாவரங்களைப் பற்றி குறிப்பிட்ட வட்டாரத்தில் அதிக சிரமமின்றி கண்டறிய உதவும் வகையில் கோவையை அடுத்த ஆனைக்கட்டியில் அமைக்கப்பட்ட நீலகிரி உயிர்க்கோள இயற்கைப் பூங்கா ஆகும். இவரது அந்த அரிய முயற்சியால் கோவையில் பயன்பட்டோர் பலர்.

தற்சமயம் சென்னையில் அடையாறு கழிமுகப்பகுதியை ஒட்டியுள்ள அடையாறு சுற்றுச் சூழல் பூங்காவில் நெய்தல் சார்ந்த பெரும்பரப்பிலான தாவரக்காட்டினை பராமரித்து வரும் பெருமகனார், சுற்று சூழல் மாணவர்களுக்காகவும் இயற்கை ஆர்வலர்களும் பயன் பெறும் வகையில் இந்த அரிய நூலைப் படைத்து தந்துள்ளார்.

சில திருக்கோயில்களில் தல மரங்கள் சிறப்பை, இன்றைய வளரும் தலைமுறைகளுக்கும் எடுத்துச் சொல்லும் விதமாக திருக்கோயில் தலவிருட்சங்களையும் அதனதன் இயல்புகளையும் படத்துடன் விளக்கி, அத்துடன்

அதன் மருத்துவ பயன் மலரும் பருவம்,  காய் கனிகளைத் தரும் பருவம் ஆகிய விவரங்களை அறிவியல் நோக்கில் தந்துள்ள பாங்கு பாராட்டுக்கு உரியது.

மக்கள் வழிபடும் கோவில்களில் உள்ள தலவிருட்சங்களின் அறிவியல் பெயர் அவை சார்ந்த குடும்பம் அவற்றின் படங்கள் ஆகியன இத்துறையில் மேற்கொண்டு தலவிருட்சங்களைப் பற்றித் தொடர்ந்து ஆய்வு மேற்கொள்ளச் சிறந்த வழிகாட்டியாக நூலின் அமைப்பு இருப்பது வரவேற்கத்தக்கது.


பசுவை தெய்வமாக போற்றுவது போலவே, மரங்களையும் தெய்வமாக வழிபடும் மரபு நமது கலாச்சாரத்தில் உள்ளது. இந்த தல விருட்சங்களை சிறப்பாக தொகுத்து தந்துள்ள, நூலாசிரியர் இரத்தினசபாபதி அவர்களை இயற்கை விரும்பிகள் எவரும் பாராட்டாமல் இருக்க முடியாது.

தாவரவியல் மாணவர்கள் மற்றும் பொதுமக்களும், இந்த நூலின் பயனை உணர்ந்து, மரங்களை போற்றவும் , திருக்கோயில்களில் விருட்சங்களை பேணவும் முன் வர வேண்டும் என்பது என் அவா. இப்பணியால் அறிவியல் அறிஞர்களின் பாராட்டைப் பெறுவதோடு, கூட ஆன்மாவிற்கு என்றும் துணையாக உதவும் புண்ணியத்தையும் தேடிக்கொண்டுள்ளார்.

வளர்க இவரது அரும் பணி!.

வாழ்த்துக்களுடன்,
பேரா. முனைவர் க.ரத்தினம்
கோவை

# அணிந்துரை



நா. சுகால் சந்த் ஜெயின்
ஜெயின்ஸ் இந்தியா அறக்கட்டளை
சியாட் ஹவுஸ் 4 வது மாடி
961, பூந்தமல்லி நெடுஞ்சாலை
சென்னை 600 084
தொலைபேசி 044 4293 3300
044 4293 3333

உங்கள் கைகளில் தவழும் திரு.இரத்தினசபாபதி அவர்கள் கைவண்ணத்தில் மலர்ந்த "*மன வளம் காக்கும் தீர்த்தங்கரரும்... மண் வளம் காக்கும் விருட்சங்களும்....*" என்ற இந்த புத்தகம் ஒரு அரிய பொக்கிஷமாக மாணவர்களாலும், இயற்கை ஆர்வலர்களாலும் போற்ற வேண்டிய நூல்.

மண் வளம் பெருக வேண்டும் என்றால் மழை வளம் இருக்க வேண்டும். மழை வளமாக பொழிய வேண்டும் என்றால், மரங்கள் அவசியம்.

மண் வளம் காக்க மரங்கள் அவசியம் என்பதை நாம் அறிவோம். கிடைத்தற்கரிய இந்த மானிட பிறவியில், நாம் பல்வேறு எதிர்மறை சிந்தனை உள்ளவர்களுடன் வாழும் சூழ்நிலையில் உள்ளோம். இந்நிலையில், மன வளம் காப்பது மிகவும் அவசியமான ஒன்றாகும்.

மன வளம் காக்க, சிறந்த வழிகாட்டிகளை தேடி அலையும் இளைய சமூகத்தினர், ஜைன மதம் போதிக்கும், எளிமையான அடிப்படை கொள்கைகளை பின்பற்றி வாழ்ந்தால் மன வளம் சிறக்கும். இந்த மன வளம் பெற வழிகாட்டியாக நாம் போற்றி தொழும் சமண தீர்த்தங்கரர்களை நாம் அறிந்து கொண்டு வாழ்தல் அவசியம்.

வணக்கத்திற்குரிய 24 தீர்த்தங்கரர்களை பற்றிய குறிப்புகளுடன், ஒவ்வொரு தீர்த்தங்கரரின் புகைப்படத்துடன் அவருக்கு உரிய இலாஞ்ச்சனத்தையும் (emblem) அவர் எந்த விருட்சத்தின் கீழ் தவம் இயற்றி வாலறிவு (கேவலஞானம்) பெற்றனரோ, அந்த விருட்சங்களின் படத்தையும் இந்த நூலில் வெளியிட்டுள்ளது என்பது சிறப்பான அம்சமாகும்.

இப்புத்தகத்தின் இன்னொரு சிறப்பு என்ன என்றால், அனைத்து தீர்த்தங்கரின் விபரங்களுடன், அவர்களின் தாய் தந்தையர் பெயர்கள், நிறம், பிறப்பு, முக்தி பெற்ற நாள் மற்றும் பல விவரங்களையும் முழுமையாக தரப்பட்டுள்ளது. தீர்த்தங்கரர்கள் ஞானம் பெற்ற, இந்த தாவரங்கள் யாவும் மருத்துவ குணங்களை கொண்டவையாகும். போற்றுதற்குரியவையாகும்.

தமிழில் வெளிவரும் “மன வளம் காக்கும் தீர்த்தங்கரரும்... மண் வளம் காக்கும் விருட்சங்களும்....” என்ற இந்த புத்தகத்தை வெளியிடுவதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். இந்நூலை குறித்த தங்களது மேலான கருத்துக்களை மின் அஞ்சல் வழியாக sugalchand@yahoo.com அல்லது அலுவலக முகவரிக்கு கடிதம் மூலம் வழங்கிட அன்புடன் வேண்டுகிறேன்.

நல்வாழ்த்துக்களுடன்,

நா. சுகால் சந்த் ஜெயின்

# என்னுரை

மரம் இல்லை என்றால் மனித வளம் இல்லை. மற்ற உயிரினங்களுக்கும் மரமே ஆதாரம். இதனை அறிந்தே நம் முன்னோர்கள் மரங்களை சைவ வைணவ ஆலயங்களில் தலவிருட்சங்களாகபோற்றி வந்தனர். அந்தமரங்களை தெய்வமாகவே போற்றி பிரதட்சனம் செய்வதும், வழிபட்டு வளர்த்து காத்து வந்தனர். மரங்களை பாதுகாக்க வேண்டும் என்னும் கருத்து எல்லா மதத்தினரிடமும் உண்டு.

கடம்பவநேசர், மருதவநேசர், ஆலங்காட்டீசர், முல்லைவனநாதர், பனங்காட்டீசர், புன்னைவன நாதர், குறும்பலா நாதர், வில்வனேஸ்வரர் போன்ற இறைவனின் திருநாமங்கள் தலவிருட்சங்களைக் கொண்டே அழைக்கப்படுகிறது. இதுவே முன்னோர்கள் விருட்சங்களை எப்படிப் போற்றிப் பாதுகாத்து வந்தனர் என்பதற்குச் சான்றாகும். சைவ வைணவத்தில் மட்டும் இல்லாது சமணம் மற்றும் பௌத்த சமயத்திலும் விருட்சங்களைப் போற்றி மகிழ்ந்தனர்.

சமணத்தைத் தோற்றுவித்த ஜைன சமயத்தில் மகாவீரர் வரையில் உள்ள 24 தீர்த்தங்கரர்கள் முக்தி பெற்ற மரங்களைக் குறிப்பிட்டுப் போற்றுவார்கள். இந்த அடிக்குறிப்புகளை சான்றுகளாக இந்தப் புத்தகத்தில் ஒவ்வொரு தீர்த்தங்கரரையும் குறித்து தனியாகத் தரப்பட்டு உள்ளது, இப்புத்தகத்திற்கு மெருகூட்டும் என உறுதியாக நம்புகிறேன்.

பௌத்தத்திலும் புத்தர் ஞானம் பெற்றது போதி மரம் என்பதை நாம் அறிவோம். அனைத்து விருட்சங்களையும் போற்றிப் பாதுகாக்க வேண்டும். தலவிருட்சங்களின் விபரங்களை வருங்கால சந்ததிகளுக்கு எடுத்துச் செல்ல வேண்டும். இந்த முயற்சியின் பயனே உங்கள் கைகளில் தவழ்ந்து கொண்டு இருக்கும் இந்நூல்.

இந்நூலில் 68 மரங்கள் 9 செடிகள் 4 கொடிகள் மற்றும் 3 புல்வகைகள் பற்றிய குறிப்புகள் உள்ளது. இவற்றுடன் நால்வர் பெருமக்கள் என சைவர்கள் போற்றும் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் அருளிய திருமுறைகள் பாடல் பெற்ற தலங்கள் பற்றிய குறிப்புகளுடன், 24 சமண தீர்த்தங்கரர்கள் போற்றி வணங்கும், விருட்சங்களை பற்றிய குறிப்புகள் தந்துள்ளது.

இந்நூலில் தலமரங்களின் விபரங்களும், அவைகளின் படங்களில், பூ, இலை, மற்றும் காய் ஆகியவற்றின் அடையாளம் காணும்வகையில் தரப்பட்டு உள்ளது. இதை படிப்பவர்களுக்கு தாவரங்களைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தையும், பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வையும் தரும் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு.

மரம் வைத்தால் மழை வரும் என்ற ஆன்றோர் வாக்கிற்கு ஏற்ப, முக்கிய நிகழ்வுகளில் மற்றும் பள்ளி கல்லூரிகளில் மரக்கன்றுகளை நடுகிறார்கள். சில நிகழ்ச்சிகளில் மரக்கன்றுகளைப் பரிசாக தருகிறார்கள். அழகுக்காக மட்டுமின்றி ஆரோக்கியம் மற்றும் வழிபாட்டிற்காகவும் வளர்க்கப்படும் மரங்களின் குறிப்புகளையும் தாங்கி வரும் இந்த நூலினை, வெளியிட உதவிய ஜெயின்ஸ் இந்தியா அறக்கட்டளையின் அறங்காவலர் திரு.சுகால்சந்த் ஜெயின் அவர்களுக்கு அன்பு கலந்த நன்றியினை சேர்க்கிறேன்.

நூல் செவ்வனே அமைய அனைத்து வழியிலும் உதவி புரிந்த கோவை சர்வஜன மேல்நிலைப்பள்ளியின் தமிழ் ஆசிரியர் திரு.தங்கமணி அவர்களுக்கும்,வேண்டிய பொழுது எல்லாம் நல் ஆலோசனை வழங்கி உதவிய முனைவர் மு. தமிழரசன் அவர்களுக்கும், தல மரங்களைப் பற்றிய குறிப்புகள் தந்து உதவிய முனைவர் மா.குணசேகரன் அவர்களுக்கும், ஆனைகட்டி அர்ஷ வித்யா குருகுலம் திரு. இராமன்ஜி அவர்களுக்கும் தனிப்பட்ட நன்றியை உரியதாக்குகிறேன்.

இந்த நூலில் சேர்ப்பதற்கென சிறப்பானப் படங்களை தந்து உதவிய திரு.தினேஷ் வாக், திரு.இளங்கோ, திரு.ராஜன் மற்றும் நண்பர்களுக்கு சிறப்பான நன்றிகளைச் சொல்லியே ஆக வேண்டும். புத்தக வடிவமைப்பிலும், திருத்தத்திலும் ஊக்குவித்து உதவிய திரு.விசு அய்யர் அவர்களுக்கும், பல்வேறு நிலைகளில் தக்க ஆலோசனைகள் வழங்கிய முனைவர் ஆ.குமரகுரு, திரு CK.அசோக்குமார், திரு ர.மாரிமுத்து, திரு பா.வின்சென்ட் அவர்களுக்கும், கணிணி வடிவமைப்பு செய்து தந்த நாமக்கல் ஜோதிடர் திரு.பொன்தாமரைக்கண்ணன் ஆகியோருக்கும் எனது நன்றியும் அன்பும் எப்போதும் உண்டு.

இந்த முயற்சியில், பிச்சாண்டி குளம் காடுகள் ஆலோசனை மையத்தின் இயக்குனர் திரு.ஜாஸ்புரூக்ஸ் அவர்கள், முதன்மை ஆய்வாளர் திரு.எரிக்இராமானுஜம் மற்றும் சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையின் திட்ட அலுவலர் முனைவர் வை.கலையரசன் அவர்களின் ஆதரவுக்கும், திரு P.ராஜேந்திர பிரசாத் ஜெயின் அவர்களின் உதவிக்கும், இந்த நூலுக்கு வாழ்த்துரை வழங்கிய முனைவர் க.ரத்தினம் அவர்களுக்கும் நன்றியினைப் பதிவு செய்வதில் மகிழ்ச்சி கொள்கிறேன்.

தாவரவியல் மாணவர்கள், ஆன்மீக அன்பர்கள், இயற்கை விரும்பிகள் என அனைத்து தரப்பு மக்களும் இந்த புத்தகத்தை வாங்கி பயன் பெற வேண்டும். இயற்கை வளத்தை பாதுகாத்து வளர்க்க வேண்டுமென்ற, அன்பான வேண்டுகோளுடன் தொடர்ந்து நூலுக்குள் செல்வோம்.

**பூ. இரத்தினசபாபதி**
2/11, சூர்யா நகர், விளாங்குறிச்சி
கோயம்புத்தூர் 641035
மின்னஞ்சல் brspathy@gmail.com
அலைபேசி : 7200643747

# பொருளுரை


| விபரம் | பக்க எண் |
|---|---|
| சமணம் ஒரு அறிமுகம் | 12 |
| தீர்த்தங்கரர் விபரங்கள் | 14 |
| தீர்த்தங்கரர் பட்டியல் (ஆங்கிலம், இந்தி) | 38 |
| இயற்கை சொல்லும் இரகசியங்கள் | 42 |
| அகில் | 45 |
| அசோகம் | 46 |
| அத்தி | 47 |
| அரசு | 48 |
| அலரி | 49 |
| அழிஞ்சில் | 50 |
| ஆத்தி | 51 |
| ஆமணக்கு | 52 |
| ஆல் | 53 |
| இலந்தை | 55 |
| இலுப்பை | 56 |
| ஊமத்தை | 57 |
| எருக்கு | 58 |
| எலுமிச்சை | 59 |
| கடம்பு | 60 |
| கல்யாணமுருங்கை | 61 |
| கண்டங்கத்திரி | 62 |
| கல்வாழை | 63 |
| கடுக்காய் | 64 |
| கருங்காலி | 65 |
| கல்லத்தி | 66 |
| காரை | 67 |
| காட்டாத்தி | 68 |
| கிளுவை | 69 |

| விபரம் | பக்க எண் |
|---|---|
| குரா | 70 |
| குருந்து | 71 |
| கோரை | 72 |
| கோங்கிலவு (முள்ளிலவு) | 73 |
| சரக் கொன்றை | 74 |
| செண்பகம் | 75 |
| சதுரக்கள்ளி | 76 |
| சந்தனம் | 77 |
| சிலந்திமரம் | 78 |
| சிறுபூளை | 79 |
| தருப்பை | 80 |
| தாழை | 81 |
| தில்லை | 82 |
| துளசி | 83 |
| தென்னை | 84 |
| தேற்றா | 85 |
| நந்தியாவட்டம் | 86 |
| நாரத்தை | 87 |
| நாகலிங்கம் | 88 |
| நாவல் | 89 |
| நுணா | 90 |
| நெல்லி | 91 |
| பராய் | 92 |
| பலா | 93 |
| பவழமல்லி | 94 |
| பன்னீர் | 95 |
| பனை | 96 |
| பாதிரி | 97 |
| பாலை | 98 |
| பிரம்பு | 99 |
| புங்கன் | 100 |

| விபரம் | பக்க எண் |
|---|---|
| புன்னாகம் | 101 |
| புரசு | 102 |
| புளி | 103 |
| புன்னை | 104 |
| பெரியாநங்கை | 105 |
| மகிழம் | 106 |
| மல்லிகை | 107 |
| மந்தாரை | 108 |
| மரமல்லி | 109 |
| மருதம் | 110 |
| மாதவி | 111 |
| மா | 112 |
| மாவிலங்கம் | 113 |
| முல்லை | 114 |
| முருங்கை | 115 |
| மூங்கில் | 116 |
| வஞ்சி | 117 |
| வன்னி | 118 |
| வாகை | 119 |
| வால்மிளகு | 120 |
| வாழை | 121 |
| விடத்தளா | 122 |
| வில்வம் | 123 |
| விழுதி | 124 |
| விளா | 125 |
| விராலி | 126 |
| வெள்வேல் | 127 |
| வேம்பு | 128 |
| வேங்கை | 129 |
| நட்சத்திரங்களும் மரங்களும் (பட்டியல்) | 130 |

# “சமணம்” - ஒரு அறிமுகம்.

“அகிம்சையே மேலான அறம்’

‘ஒன்றாக நல்லது கொல்லாமை’ என்பது வள்ளுவம்

‘தீதும் நன்றும் பிறர் தர வாரா’ என்பது புறநானுறு

இந்த அடிப்படைகளை வலியுறுத்தும் பாரத தேசத்தின் தொன்மையான சமயம் ஜைன சமயம் ஆகும்.

சமணம் என்னும் சொல் “சிரமண” என்னும் வடமொழியின் திரிபாகும். அதனால் சிரமணர் தமிழில் சமணர் என அழைக்கப்பட்டனர். சிரமணர் என்பதற்கு இன்பம் மற்றும் துன்பம் ஆகிய இரண்டையும் சமமாக ஏற்பவர் என்று பொருள் கொள்ளலாம். தன்னை இகழ்வாரை கோபித்தலும் புகழ்வாரைப் போற்றலும் இல்லாதவர். அன்பும் அருளும் நிறைந்தவர். இறப்பையும் பிறப்பையும் பொருட்படுத்தாமல், உலகில் நல்லவற்றை செய்ய வேண்டும் என்பதற்காக தங்களின் எல்லா சுகங்களையும் துறந்தவர்.

ஐம்புலன்களை தன்வயப்படுத்தியவர். செருக்கற்றவர், எக்காரணத்தினாலும் எவ்வுயிர்க்கும் தீங்கு நினையாதவர். ஒழுக்கத்தை உயிரினும் மேலாக காப்பவர் என்று சொல்லலாம். சமண சமய கொள்கைகளை அவ்வப்போது உலகத்தில் பரவ செய்வதற்காக தீர்த்தங்கரர்கள் தோன்றினர் என்பது இம் மதக் கொள்கை.

தீர்த்தங்கரர் என்பதற்குக் தம் ஆன்மாவை கரையேற்றிக் கொண்டவர் என்பது பொருள். இது வரை 24 தீர்த்தங்கரர் தோன்றி உள்ளார்கள் என்பதும் இன்னும் தோன்றுவர் என்பதும் இச்சமய கொள்கை.

முதல் தீர்த்தங்கராகிய ரிஷபநாத தேவரால் தோற்றுவிக்கப்பட்டது. வழிபடும் தெய்வங்களாக தொழப்படுகின்ற 24 தீர்த்தங்கரர்களும், வேண்டுதல் வேண்டாமை இல்லாது, தம்மை அறிந்தவராக, இருவினையற்றவர்களாக என்றும் பேரின்ப நிலையில் இருப்பவராவர். இவர்கள் கடவுளாகப் போற்றி துதிக்கப்படுகின்றனர்.

பண்டைய தமிழ் நூல்களில் இவர்களை அறம் புனைவோர்கள் எனப்பட்டனர். இவர்கள் கர்மங்களை வெற்றி கொண்டு வீடுபேறு பெற்றவர்கள் ஆதலால் அவர்கள் ஜினர்கள்–வெற்றியாளர்கள் என அழைக்கப்பட்டனர். இவர்களால் விளக்கப்பட்ட ஆன்மீக நெறி ஜைனம் ஆகும். ஜினர்களால் போதிக்கப்பட்டதால் தான் ஜைன சமயம் என்றும் பின்பற்றுபவர்களை ஜைனர்கள் என்றும் குறிக்கபடுகிறது. சமயம் பற்றிய ஆய்வு ஜைனவியல் எனப்படும். தனித்தமிழில் சமண சமயம் என்றும் வழங்கபடுகிறது.

ஜினர் பூசைக்குறியவர் எனும் பொருளில் பூஜ்யர்–அருகர் எனப்பட்டனர். அவர்கள் போதித்த சமயம் எனும் பொருளில் ஆருகதம்–அருகமதம்–அருக சமயம் எனப்பட்டது.

சமண சமயம் இல்லறத்தார்களும் மற்றும் துறவிகளும் பின்பற்ற வேண்டிய அறங்களை அனுவிரதம் என்றும் மகாவிரதம் என்று அடைவு செய்துள்ளது. விரதம் என்பது நோன்பினை குறிக்கும். வாழ்க்கையை ஒரு விரதமாக கடைபிடிக்க வேண்டும் என்பது மகாவீரரின் குறிக்கோள் ஆகும். இதனால்தான் இல்லறத்தாரைச் சாவகநோன்பிகள் என்றும் துறவறத்தாரை பட்டினி நோன்பிகள் என்றும் சிலம்பு பேசுகிறது.

இவர்கள் பொதுவாக கடைபிடிக்க வேண்டிய பொதுவான ஐந்து அனுவிரதங்கள் 1) அகிம்சை 2) வாய்மை 3) கள்ளாமை 4) துறவு 5) அவாவறுத்தல் என்பனவாம். சமண சமயத்தில் விலங்குகள் மற்றும் தாவரங்களைப் பாதுகாப்பது என்பது தொன்று தொட்டு இருக்கிறது. சான்றாக 24 தீர்த்தங்கரர்களுக்கும் இலாஞ்சனமாக விலங்குகள் உள்ளது. தீர்த்தங்கரர்கள் முக்தி அடைந்த மரம் புனித விருட்சமாக போற்றப்படுகிறது.


இந்த அனுவிரதங்களை நமக்கு உபதேசித்து, நாம் தெய்வமாக துதிக்கப்படும் தீர்த்தங்கரர்கள் பற்றிய குறிப்புகளுடன், அவர்கள் கேவலஞானம் பெற்ற விருட்சங்களுடன் “மன வளம் காக்கும் தீர்த்தங்கரரும்... மண் வளம் காக்கும் விருட்சங்களும். ” என்ற இந்த புத்தகம் அரங்கேற்றம் பெற்று உங்கள் கைகளில் தவழ்கிறது...

தொடர்ந்து படியுங்கள். பயன் பெறுங்கள்.

# 1.ரிஷபநாத சுவாமி
## (ஆதிநாத சுவாமி)



முதல் தீர்த்தங்கரர்


எருது


ஆலமரம்

| | |
|---|---|
| தந்தை | : நாபி மகாராஜன் |
| தாய் | : மருதேவி |
| வம்சம் | : இட்சுவாகு |
| பிறந்த இடம் | : அயோத்தி |
| பிறந்த நாள் | : சித்திரை மாதம், தேய்பிறை, நவமி திதி, உத்திராட நட்சத்திரம் சூரிய உதயவேளை |
| நிறம் | : பொன் நிறம் |
| உயரம் | : 500 வில் |
| ஆயுள் | : 84 இலட்சம் பூர்வம் |
| கணதரர் எண்ணிக்கை | : 84 |
| பிரதம கணதரர் | : விருஷப சேனர் |
| தானம் தந்த சீலர் | : சிரேயாம்ஸர் |
| முக்தி அடைந்த நாள் | : மாசி மாதம், தேய்பிறை, சதுர்த்தசி திதி |
| முக்தி அடைந்த இடம் | : கைலாச கிரி |
| இலாஞ்சனம் | : எருது |
| விருட்சம் | : ஆலமரம் (வட விருட்சம்) |
| Botanical Name | : *Ficus benghalensis* |

# 2.அஜிதநாத சுவாமி



2ம் தீர்த்தங்கரர்




யானை



சப்த பண்ண மரம்

| | | |
|---|---|---|
| தந்தை | : | ஜித சத்ரு |
| தாய் | : | விஜய சேனை |
| வம்சம் | : | இட்சுவாகு |
| பிறந்த இடம் | : | அயோத்தி |
| பிறந்த நாள் | : | மாசி மாதம்,, வளர்பிறை, தசமி திதி, ரோகிணி நட்சத்திரம் |
| நிறம் | : | பொன் நிறம் |
| உயரம் | : | 450 வில் |
| ஆயுள் | : | 72 இலட்சம் பூர்வம் |
| கணதரர் எண்ணிக்கை | : | 90 |
| பிரதம கணதரர் | : | சிம்மசேனர் |
| தானம் தந்த சீலர் | : | பிரம்மதத்தன் |
| முக்தி அடைந்த நாள் | : | சித்திரை மாதம், வளர்பிறை, பஞ்சமி திதி, ரோகிணி நட்சத்திரம் |
| முக்தி அடைந்த இடம் | : | சன்மேதகிரி |
| இலாஞ்சனம் | : | யானை |
| விருட்சம் | : | சப்த பண்ணமரம் (ஏழிலைப்பாலை) |
| Botanical Name | : | *Alstonia scholaris* |

# 3. சம்பவநாத சுவாமி



3ம் தீர்த்தங்கரர்


குதிரை



சால மரம்

| | |
|---|---|
| தந்தை | : த்ருடராஜன் |
| தாய் | : சுஷேனை |
| வம்சம் | : இட்சுவாகு |
| பிறந்த இடம் | : ஸராவஸ்தி |
| பிறந்த நாள் | : கார்த்திகை மாதம்,<br>பௌர்ணமி திதி,<br>மிருகசீரிஷம் நட்சத்திரம் |
| நிறம் | : பொன் நிறம் |
| உயரம் | : 400 வில் |
| ஆயுள் | : 60 இலட்சம் பூர்வம் |
| கணதரர் எண்ணிக்கை | : 105 |
| பிரதம கணதரர் | : சாரு சேனர் |
| தானம் தந்த சீலர்: | சுரேந்திர தத்தர் |
| முக்தி அடைந்த நாள் | : சித்திரை மாதம், வளர்பிறை,<br>சதுர்த்தி திதி,<br>மிருகசீரிஷம் நட்சத்திரம் |
| முக்தி அடைந்த இடம் | : சன்மேதகிரி |
| இலாஞ்சனம் | : குதிரை |
| விருட்சம் | : சால மரம் |
| Botanical Name | : *Shorea robusta* |

# 4.அபிநந்தனநாத சுவாமி



4ம் தீர்த்தங்கரர்



குரங்கு



வேங்கை

| | |
|---|---|
| தந்தை | : சுயம்வரன் |
| தாய் | : சித்தார்த்தை |
| வம்சம் | : இட்சுவாகு |
| பிறந்த இடம் | : அயோத்தி |
| பிறந்த நாள் | : மாசி மாதம், வளர்பிறை, துவாதசி திதி, புனர்பூசம் நட்சத்திரம் |
| நிறம் | : பொன் நிறம் |
| உயரம் | : 350 வில் |
| ஆயுள் | : 50 இலட்சம் பூர்வம் |
| கணதரர் எண்ணிக்கை | : 103 |
| பிரதம கணதரர் | : வஜ்ஜர நாபி |
| தானம் தந்த சீலர் | : இந்திர தத்தர் |
| முக்தி அடைந்த நாள் | : வைகாசி மாதம், வளர்பிறை, சஷ்டி திதி, புனர்பூசம் நட்சத்திரம் |
| முக்தி அடைந்த இடம் | : சன்மேதகிரி |
| இலாஞ்சனம் | : குரங்கு |
| விருட்சம் | : வேங்கை மரம் |
| Botanical Name | : *Pterocarpus marsupium* |

# 5.சுமதிநாத சுவாமி



5ம் தீர்த்தங்கரர்




சக்கரவாகம்



பிரியங்கு மரம்

| | |
|---|---|
| தந்தை | : மேகரதர் |
| தாய் | : சுமங்கலாதேவி |
| வம்சம் | : இட்சுவாகு |
| பிறந்த இடம் | : அயோத்தி |
| பிறந்த நாள் | : சித்திரை மாதம், வளர்பிறை, ஏகாதசி திதி, மகம் நட்சத்திரம் |
| நிறம் | : பொன் நிறம் |
| உயரம் | : 300 வில் |
| ஆயுள் | : 40 இலட்சம் பூர்வம் |
| கணதரர் எண்ணிக்கை | : 116 |
| பிரதம கணதரர் | : சமரர் |
| தானம் தந்த சீலர் | : பத்ம தத்தர் |
| முக்தி அடைந்த நாள் | : சித்திரை மாதம், வளர்பிறை, ஏகாதசி திதி, மகம் நட்சத்திரம் |
| முக்தி அடைந்த இடம் | : சன்மேதகிரி |
| இலாஞ்சனம் | : சக்கர வாகம் (பறவை) |
| விருட்சம் | : பிரியங்கு மரம் (ஞாழல்) |
| Botanical name | : *Callicarpa macrophylla* |

# 6.பத்மப் பிரபநாத சுவாமி



6ம் தீர்த்தங்கரர்




சிவப்பு தாமரை



அரச மரம்

| | |
|---|---|
| தந்தை | : தரணன் |
| தாய் | : சுசீமை |
| வம்சம் | : இட்சுவாகு |
| பிறந்த இடம் | : கௌசாம்பி |
| பிறந்த நாள் | : கார்த்திகை மாதம், தேய்பிறை, திரயோதசிதிதி, சித்திரை நட்சத்திரம் |
| நிறம் | : சிவப்பு |
| உயரம் | : 250 வில் |
| ஆயுள் | : 30 இலட்சம் பூர்வம் |
| கணதரர் எண்ணிக்கை | : 110 |
| பிரதம கணதரர் | : வஜ்ஜிர சமரர் |
| தானம் தந்த சீலர் | : சோம தத்தர் |
| முக்தி அடைந்த நாள் | : பங்குனி மாதம், தேய்பிறை, சதுர்த்தி திதி, சித்திரை நட்சத்திரம் |
| முக்தி அடைந்த இடம் | : சன்மேதகிரி |
| இலாஞ்சனம் | : சிவப்பு தாமரை |
| விருட்சம் | : அரச மரம் |
| Botanical Name | : *Ficus religiosa* |

# 7.சுபார்சுவநாத சுவாமி



7ம் தீர்த்தங்கரர்




சுவஸ்திக்



வாகை மரம்

| | |
|---|---|
| தந்தை | : சுப்ரதிஷ்டன் |
| தாய் | : பிரிதிவிசேனை |
| வம்சம் | : இட்சுவாகு |
| பிறந்த இடம் | : வாரணாசி |
| பிறந்த நாள் | : ஆனி மாதம், வளர்பிறை, துவாதசி திதி, விசாக நட்சத்திரம் |
| நிறம் | : பச்சை |
| உயரம் | : 200 வில் |
| ஆயுள் | : 20 இலட்சம் பூர்வம் |
| கணதரர் எண்ணிக்கை | : 95 |
| பிரதம கணதரர் | : பல நாமர் |
| தானம் தந்த சீலர் | : மகேந்திர தத்தர் |
| முக்தி அடைந்த நாள் | : பங்குனி மாதம், தேய்பிறை, சப்தமி திதி, அனுஷ நட்சத்திரம் |
| முக்தி அடைந்த இடம் | : சன்மேதகிரி |
| இலாஞ்சனம் | : சுவஸ்திக் |
| விருட்சம் | : வாகை மரம் |
| Botanical Name | : *Albizia lebbeck* |

# 8.சந்திரப் பிரபநாத சுவாமி



8ம் தீர்த்தங்கரர்




சந்திரன்



நாக மரம்

| | |
|---|---|
| தந்தை | : மகாசேனன் |
| தாய் | : இலட்சுமனை |
| வம்சம் | : இட்சுவாகு |
| பிறந்த இடம் | : சந்திரபுரம் |
| பிறந்த நாள் | : தை மாதம், தேய்பிறை,<br>ஏகாதசி திதி,<br>அனுஷ நட்சத்திரம் |
| நிறம் | : வெண்மை |
| உயரம் | : 150 வில் |
| ஆயுள் | : 10 இலட்சம் பூர்வம் |
| கணதரர் எண்ணிக்கை | : 93 |
| பிரதம கணதரர் | : தத்தர் |
| தானம் தந்த சீலர் | : சோம தத்தர் |
| முக்தி அடைந்த நாள் | : பங்குனி மாதம், வளர்பிறை,<br>பஞ்சமி திதி,<br>கேட்டை நட்சத்திரம் |
| முக்தி அடைந்த இடம் | : சன்மேதகிரி |
| இலாஞ்சனம் | : சந்திரன் |
| விருட்சம் | : நாக மரம் (Axle wood tree) |
| Botanical Name | : *Anogeissus latifolia* |

# 9. புஷ்ப தந்த (சுவிதிநாத) சுவாமி



9ம் தீர்த்தங்கரர்




முதலை



நாவல் மரம்

| | |
|---|---|
| தந்தை | : சுக்ரீவர் |
| தாய் | : ராமாதேவி |
| வம்சம் | : இட்சுவாகு |
| பிறந்த இடம் | : காகந்தி |
| பிறந்த நாள் | : மார்கழி மாதம், வளர்பிறை, பிரதமை திதி, மூல நட்சத்திரம் |
| நிறம் | : வெண்மை |
| உயரம் | : 100 வில் |
| ஆயுள் | : 2 இலட்சம் பூர்வம் |
| கணதரர் எண்ணிக்கை | : 88 |
| பிரதம கணதரர் | : விதர்ப்பர் |
| தானம் தந்த சீலர் | : புஷ்ய மித்ர தத்தர் |
| முக்தி அடைந்த நாள் | : புரட்டாசி மாதம், வளர்பிறை, அஷ்டமி திதி, மூல நட்சத்திரம் |
| முக்தி அடைந்த இடம் | : சன்மேதகிரி |
| இலாஞ்சனம் | : முதலை |
| விருட்சம் | : நாவல் மரம் |
| Botanical name | : *Syzygium cumini* |

# 10. சீதளநாத சுவாமி



10ம் தீர்த்தங்கரர்




கல்பதரு



வில்வ மரம்

| | |
|---|---|
| தந்தை | : த்ருடதரன் |
| தாய் | : சுனந்தா |
| வம்சம் | : இட்சுவாகு |
| பிறந்த இடம் | : பத்திரபுரம் |
| பிறந்த நாள் | : மாசி மாதம், தேய்பிறை, துவாதசி திதி, உத்திராட நட்சத்திரம் |
| நிறம் | : பொன் |
| உயரம் | : 90 வில் |
| ஆயுள் | : ஒரு இலட்சம் பூர்வம் |
| கணதரர் எண்ணிக்கை | : 81 |
| பிரதம கணதரர் | : அநகாரர் |
| தானம் தந்த சீலர் | : புனர்வசு |
| முக்தி அடைந்த நாள் | : ஐப்பசி மாதம், வளர்பிறை, அஷ்டமி திதி, பூராட நட்சத்திரம் |
| முக்தி அடைந்த இடம் | : சன்மேதகிரி |
| இலாஞ்சனம் | : கல்பதரு |
| விருட்சம் | : வில்வ மரம் |
| Botanical Name | : *Aegle marmelos* |

# 11. சிரேயாம்ஸ நாத சுவாமி



11ம் தீர்த்தங்கரர்




காண்டா மிருகம்



தும்பி மரம்

| | |
|---|---|
| தந்தை | : விஷ்ணுராஜன் |
| தாய் | : வேணுதேவி |
| வம்சம் | : இட்சுவாகு |
| பிறந்த இடம் | : சிம்மபுரம் |
| பிறந்த நாள் | : பங்குனி மாதம், தேய்பிறை, ஏகாதசி திதி, திருவோண நட்சத்திரம் |
| நிறம் | : பொன் |
| உயரம் | : 80 வில் |
| ஆயுள் | : 84 இலட்சம் வருடங்கள் |
| கணதரர் எண்ணிக்கை | : 77 |
| பிரதம கணதரர் | : குந்து |
| தானம் தந்த சீலர் | : நந்தன தத்தர் |
| முக்தி அடைந்த நாள் | : ஆவணி மாதம், பௌர்ணமி திதி, அவிட்ட நட்சத்திரம் |
| முக்தி அடைந்த இடம் | : சன்மேதகிரி |
| இலாஞ்சனம் | : காண்டாமிருகம் |
| விருட்சம் | : தும்பி மரம் (Indian Ebony) |
| Botanical Name | : *Diospyros melanoxylon* |

# 12. வாசுபூஜ்ய நாத சுவாமி



12ம் தீர்த்தங்கரர்




எருமை



கடம்ப மரம்

| | |
|---|---|
| தந்தை | : வசுபூஜ்யன் |
| தாய் | : ஜயவதி |
| வம்சம் | : இட்சுவாகு |
| பிறந்த இடம் | : சம்பாபுரம் |
| பிறந்த நாள் | : பங்குனி மாதம், தேய்பிறை, சதுர்த்தசி திதி, விசாக நட்சத்திரம் |
| நிறம் | : சிவப்பு |
| உயரம் | : 70 வில் |
| ஆயுள் | : 72 இலட்சம் வருடங்கள் |
| கணதரர் எண்ணிக்கை | : 66 |
| பிரதம கணதரர் | : பத்மதரர் |
| தானம் தந்த சீலர் | : சௌந்தர தத்தர் |
| முக்தி அடைந்த நாள் | : புரட்டாசி மாதம், வளர்பிறை, சதுர்த்தசி திதி, விசாக நட்சத்திரம் |
| முக்தி அடைந்த இடம் | : சம்பாபுரம் |
| இலாஞ்சனம் | : எருமை |
| விருட்சம் | : கடம்ப மரம் |
| Botanical Name | : *Neolamarckia cadamba* |

# 13. விமல நாத சுவாமி



13ம் தீர்த்தங்கரர்


பன்றி


நாவல் மரம்

| | |
|---|---|
| தந்தை | : கிருதவர்மர் |
| தாய் | : ஜெயசியாமை |
| வம்சம் | : இட்சுவாகு |
| பிறந்த இடம் | : காம்பிலி |
| பிறந்த நாள் | : மாசி மாதம், வளர்பிறை,<br>சதுர்த்தி திதி,<br>உத்திரட்டாதி நட்சத்திரம் |
| நிறம் | : பொன் |
| உயரம் | : 60 வில் |
| ஆயுள் | : 60 இலட்சம் ஆண்டுகள் |
| கணதரர் எண்ணிக்கை | : 55 |
| பிரதம கணதரர் | : மந்தரர் |
| தானம் தந்த சீலர் | : ஜெயதத்தர் |
| முக்தி அடைந்த நாள் | : ஆடி மாதம், தேய்பிறை,<br>அஷ்டமி திதி,<br>உத்திராடம் நட்சத்திரம் |
| முக்தி அடைந்த இடம் | : சன்மேதகிரி |
| இலாஞ்சனம் | : பன்றி (ஸுகரம்) |
| விருட்சம் | : நாவல் மரம் |
| Botanical Name | : *Syzygium cumini* |

# 14. அனந்த நாத சுவாமி



14ம் தீர்த்தங்கரர்


கரடி


அரச மரம்

| | |
|---|---|
| தந்தை | : சிம்மசேனன் |
| தாய் | : ஸர்வயஷா |
| வம்சம் | : இட்சுவாகு |
| பிறந்த இடம் | : அயோத்தி |
| பிறந்த நாள் | : ஆனி மாதம், தேய்பிறை,<br>துவாதசி திதி,<br>ரேவதி நட்சத்திரம் |
| நிறம் | : பொன் |
| உயரம் | : 50 வில் |
| ஆயுள் | : 30 இலட்சம் ஆண்டுகள் |
| கணதரர் எண்ணிக்கை | : 50 |
| பிரதம கணதரர் | : ஜெயர் |
| தானம் தந்த சீலர் | : விசாக நிருபன் |
| முக்தி அடைந்த நாள் | : சித்திரை மாதம்,<br>அமாவாசை திதி,<br>ரேவதி நட்சத்திரம் |
| முக்தி அடைந்த இடம் | : சன்மேதகிரி |
| இலாஞ்சனம் | : கரடி (பல்லூகம்) |
| விருட்சம் | : அரச மரம் |
| Botanical Name | : *Ficus religiosa* |

# 15. தருமநாத சுவாமி



15ம் தீர்த்தங்கரர்



வஜ்ராயுதம்


ஏழிலைப்பாலை

| | |
|---|---|
| தந்தை | : பானுராஜர் |
| தாய் | : சுப்ரபை |
| வம்சம் | : குரு |
| பிறந்த இடம் | : இரத்தினபுரம் |
| பிறந்த நாள் | : மாசி மாதம், வளர்பிறை,<br>திரயோதசி திதி,<br>பூச நட்சத்திரம் |
| நிறம் | : பொன் |
| உயரம் | : 45 வில் |
| ஆயுள் | : 10 இலட்சம் வருடங்கள் |
| கணதரர் எண்ணிக்கை | : 43 |
| பிரதம கணதரர் | : அரிஷ்ட சேனர் |
| தானம் தந்த சீலர் | : தியான சேனன் |
| முக்தி அடைந்த நாள் | : ஆனி மாதம், வளர்பிறை,<br>சதுர்த்தி திதி,<br>பூச நட்சத்திரம் |
| முக்தி அடைந்த இடம் | : சன்மேதகிரி |
| இலாஞ்சனம் | : வஜ்ராயுதம் |
| விருட்சம் | : ஏழிலைப் பாலை (சப்த பண்ண மரம்) |
| Botanical Name | : *Alstonia scholaris* |

# 16. சாந்திநாத சுவாமி


16ம் தீர்த்தங்கரர்


மான்



நந்தியாவட்டை

| | |
|---|---|
| தந்தை | : விசுவசேனன் |
| தாய் | : ஐராதேவி |
| வம்சம் | : குரு |
| பிறந்த இடம் | : அஸ்தினாபுரம் |
| பிறந்த நாள் | : ஆனி மாதம், தேய்பிறை, சதுர்த்தசி திதி, பரணி நட்சத்திரம் |
| நிறம் | : பொன் |
| உயரம் | : 40 வில் |
| ஆயுள் | : ஒரு லட்சம் ஆண்டுகள் |
| கணதரர் எண்ணிக்கை | : 36 |
| பிரதம கணதரர் | : சக்ராயுதர் |
| தானம் தந்த சீலர் | : சுமித்திரன் |
| முக்தி அடைந்த நாள் | : ஆனி மாதம், தேய்பிறை, சதுர்த்தசி திதி, பரணி நட்சத்திரம் |
| முக்தி அடைந்த இடம் | : சன்மேதகிரி |
| இலாஞ்சனம் | : மான் (ஹரிணம்) |
| விருட்சம் | : நந்தியாவட்டை மரம் |
| Botanical Name | : *Ervatamia coronaria* |

# 17. குந்துநாத சுவாமி



17ம் தீர்த்தங்கரர்




ஆடு



அத்தி மரம்

| | | |
|---|---|---|
| தந்தை | : | சூரசேனன் |
| தாய் | : | ஸ்ரீமதிதேவி |
| வம்சம் | : | குரு |
| பிறந்த இடம் | : | அஸ்தினாபுரம் |
| பிறந்த நாள் | : | வைகாசி மாதம், வளர்பிறை, பிரதமை திதி, கிருத்திகை நட்சத்திரம் |
| நிறம் | : | பொன் |
| உயரம் | : | 35 வில் |
| ஆயுள் | : | 95 ஆயிரம் ஆண்டுகள் |
| கணதரர் எண்ணிக்கை | : | 35 |
| பிரதம கணதரர் | : | சுயம்பு |
| தானம் தந்த சீலர் | : | தர்மமித்திரன் |
| முக்தி அடைந்த நாள் | : | வைகாசி மாதம், வளர்பிறை, பிரதமை திதி, கிருத்திகை நட்சத்திரம் |
| முக்தி அடைந்த இடம் | : | சன்மேதகிரி |
| இலாஞ்சனம் | : | ஆடு (மேஷம்) |
| விருட்சம் | : | அத்தி மரம் |
| Botanical Name | : | *Ficus racemosa* |

# 18. அரநாத சுவாமி



18 ம் தீர்த்தங்கரர்




மீன்



மாமரம்

| | |
|---|---|
| தந்தை | : சுதர்சனன் |
| தாய் | : மித்திரசேனை |
| வம்சம் | : குரு |
| பிறந்த இடம் | : அஸ்தினாபுரம் |
| பிறந்த நாள் | : மார்கழி மாதம், வளர்பிறை, நவமி திதி, ரேவதி நட்சத்திரம் |
| நிறம் | : பொன் |
| உயரம் | : 30 வில் |
| ஆயுள் | : 84 ஆயிரம் வருடங்கள் |
| கணதரர் எண்ணிக்கை | : 30 |
| பிரதம கணதரர் | : கும்பர் |
| தானம் தந்த சீலர் | : அபராஜிதன் |
| முக்தி அடைந்த நாள்; | : சித்திரை மாதம், தேய்பிறை, சதுர்த்தசி திதி, ரேவதி நட்சத்திரம் |
| முக்தி அடைந்த நாள் | : சன்மேதகிரி |
| இலாஞ்சனம் | : மீன் |
| விருட்சம் | : மாமரம் |
| Botanical Name | : *Mangifera indica* |

# 19. மல்லிநாத சுவாமி



19ம் தீர்த்தங்கரர்


பூரண கும்பம்


அசோக மரம்

| | |
|---|---|
| தந்தை | : கும்பன் |
| தாய் | : பிரபாவதி |
| வம்சம் | : இட்சுவாகு |
| பிறந்த இடம் | : மிதிலை |
| பிறந்த நாள் | : மார்கழி மாதம், வளர்பிறை, ஏகாதசி திதி, அசுவனி நட்சத்திரம் |
| நிறம் | : பொன் |
| உயரம் | : 25 வில் |
| ஆயுள் | : 55 ஆயிரம் ஆண்டுகள் |
| கணதரர் எண்ணிக்கை | : 28 |
| பிரதம கணதரர் | : விசாகர் |
| தானம் தந்த சீலர் | : நந்திசேனன் |
| முக்தி அடைந்த நாள் | : பங்குனி மாதம், வளர்பிறை, பஞ்சமி திதி, பரணி நட்சத்திரம் |
| முக்தி அடைந்த இடம் | : சன்மேதகிரி |
| இலாஞ்சனம் | : பூரண கும்பம் (கலசம்) |
| விருட்சம் | : அசோக மரம் |
| Botanical Name | : *Saraca asoca* |

# 20. முனிசுவ்விரதநாத சுவாமி



20ம் தீர்த்தங்கரர்


ஆமை


செண்பக மரம்

| | |
|---|---|
| தந்தை | : சுமித்திரன் |
| தாய் | : பத்மை |
| வம்சம் | : ஹரி |
| பிறந்த இடம் | : இராஜகிருகம் |
| பிறந்த நாள் | : சித்திரை மாதம், தேய்பிறை,<br>அஷ்டமி திதி,<br>திருவோணம் நட்சத்திரம் |
| நிறம் | : கருமை ( இந்திர நீலம்) |
| உயரம் | : 20 வில் |
| ஆயுள் | : 30 ஆயிரம் ஆண்டுகள் |
| கணதரர் எண்ணிக்கை | : 18 |
| பிரதம கணதரர் | : மல்லி |
| தானம் தந்த சீலர் | : விருஷப சேனன் |
| முக்தி அடைந்த நாள் | : பங்குனி மாதம், தேய்பிறை,<br>துவாதசி திதி,<br>திருவோணம் நட்சத்திரம் |
| முக்தி அடைந்த இடம் | : சன்மேதகிரி |
| இலாஞ்சனம் | : ஆமை ( கூர்மம்) |
| விருட்சம் | : செண்பக மரம் |
| Botanical Name | : *Magnolia champaca* |

# 21. நமிநாத சுவாமி



21ம் தீர்த்தங்கரர்




நீலோற்பலம்



மகிழமரம்

| | |
|---|---|
| தந்தை | : விஜயன் |
| தாய் | : பிப்பலா |
| வம்சம் | : இட்சுவாகு |
| பிறந்த இடம் | : மிதிலை |
| பிறந்த நாள் | : ஆடி மாதம், தேய்பிறை,<br>தசமி திதி,<br>அசுவினி நட்சத்திரம் |
| நிறம் | : பொன் |
| உயரம் | : 15 வில் |
| ஆயுள் | : 10 ஆயிரம் வருடங்கள் |
| கணதரர் எண்ணிக்கை | : 17 |
| பிரதம கணதரர் | : சுப்ரபர் |
| தானம் தந்த சீலர் | : தத்தநரபதி |
| முக்தி அடைந்த நாள் | : வைகாசி மாதம், தேய்பிறை,<br>சதுர்த்தசி திதி,<br>அசுவினி நட்சத்திரம் |
| முக்தி அடைந்த இடம் | : சன்மேதகிரி |
| இலாஞ்சனம் | : இந்தீவரம் (LILY FLOWER) (நீலோற்பலம்) |
| விருட்சம் | : மகிழ மரம் |
| Botanical Name | : *Mimusops elengi* |


# 22. நேமிநாத சுவாமி



22ம் தீர்த்தங்கரர்




சங்கு



மூங்கில்

| | |
|---|---|
| தந்தை | : சமுத்திர விஜயன் |
| தாய் | : சிவதேவி |
| வம்சம் | : ஹரி |
| பிறந்த இடம் | : துவாரகை |
| பிறந்த நாள் | : ஆவணி மாதம், வளர்பிறை,<br>சஷ்டி திதி,<br>சித்திரை நட்சத்திரம் |
| நிறம் | : கருமை (இந்திர நீலம்) |
| உயரம் | : 10 வில் |
| ஆயுள் | : 1 ஆயிரம் ஆண்டுகள் |
| கணதரர் எண்ணிக்கை | : 11 |
| பிரதம கணதரர் | : வரதத்தர் |
| தானம் தந்த சீலர் | : வரதத்தர் |
| முக்தி அடைந்த நாள் | : ஆடி மாதம், வளர்பிறை,<br>சப்தமி திதி,<br>சித்திரை நட்சத்திரம் |
| முக்தி அடைந்த இடம் | : ஊர்ஜயந்தகிரி |
| இலாஞ்சனம் | : சங்கு |
| விருட்சம் | : மூங்கில் |
| Botanical Name | : *Dendrocalamus strictus* |

# 23. பார்சுவ நாத சுவாமி
# (அப்பாண்டை நாதர்)



23ம் தீர்த்தங்கரர்


பாம்பு


தேவதாரு

| | |
|---|---|
| தந்தை | : விசுவசேனன் |
| தாய் | : வாமாதேவி |
| வம்சம் | : உக்கிர |
| பிறந்த இடம் | : வாரணாசி |
| பிறந்த நாள் | : தை மாதம், தேய்பிறை, ஏகாதசி திதி, விசாக நட்சத்திரம் |
| நிறம் | : பச்சை |
| உயரம் | : 9 முழம் |
| ஆயுள் | : 100 வருடங்கள் |
| கணதரர் எண்ணிக்கை | : 10 |
| பிரதம கணதரர் | : சுயம்பு |
| தானம் தந்த சீலர் | : தன்யன் |
| முக்தி அடைந்த நாள் | : ஆவணி மாதம், வளர்பிறை, சப்தமி திதி, விசாக நட்சத்திரம் |
| முக்தி அடைந்த இடம் | : சன்மேதகிரி |
| இலாஞ்சனம் | : பாம்பு (உரகம்) |
| விருட்சம் | : தேவதாரு |
| Botanical Name | : *Erythroxylum monogynum* |

# 24. வர்த்தமான சுவாமி (மகாவீரர்)
## (த்ரைலோக்ய நாதர்)


24ம் தீர்த்தங்கரர்


சிம்மம்


மராமரம்

| | |
|---|---|
| தந்தை | : சித்தார்த்தன் |
| தாய் | : பிரியகாரிணி |
| வம்சம் | : நாத |
| பிறந்த இடம் | : குண்டலபுரம் |
| பிறந்த நாள் | : சித்திரை மாதம், வளர்பிறை,<br>திரயோதசி திதி,<br>உத்திர நட்சத்திரம் |
| நிறம் | : பொன் |
| உயரம் | : 7 முழம் |
| ஆயுள் | : 72 ஆண்டுகள் |
| கணதரர் எண்ணிக்கை | : 11 |
| பிரதம கணதரர் | : கௌதமர் |
| தானம் தந்த சீலர் | : கூலன் |
| முக்தி அடைந்த நாள் | : கார்த்திகை மாதம், தேய்பிறை,<br>சதுர்த்தசி திதி,<br>சுவாதி நட்சத்திரம் |
| முக்தி அடைந்த இடம் | : பாவாபுரி |
| இலாஞ்சனம் | : சிம்மம் |
| விருட்சம் | : மரா மரம் (Indian Oak tree) |
| Botanical Name | : *Barringtonia acutangula* |

# LIST OF THIRTHANKARA

| Tirthankara | Emblem | Trees Name (English) | Trees Name (Hindi) |
|---|---|---|---|
| 1. Rishabhanatha or Adinath | Bull | Bargad, Banyan Tree | बरगद |
| 2. Ajitanatha | Elephant | Scholar Tree | विद्वान वृक्ष |
| 3. Sambhavanatha | Horse | Sal | साल का पेड़ |
| 4. Abhinandananatha | Monkey | Indian Kino Tree | कीनो का पेड़ |
| 5. Sumatinatha | Curlew | Priyangu, Beauty Berry | प्रियंगु |
| 6. Padmaprabhavnatha | Red lotus | Peepal Tree | पीपल का पेड़ |
| 7. Suparshvanatha | Swastik | Siris, Lebbeck tree | शिरीष |
| 8. Chandra prabhavnatha | Crescent | Axel Wood Tree | लकड़ी का पेड़ |
| 9. Puspadanta/ Suvidhinatha | Crocodile | Jambul | जामुन |
| 10. Shitalanatha | Kalpatharu | Bel | बेल |
| 11. Shreyamshanatha | Rhinoceros | Tendu, Ebony | तेंदू |
| 12. Vasupujyanatha | Buffalo | Kadam | कदम |

| Tirthankara | Emblem | Trees Name (English) | Trees Name (Hindi) |
|---|---|---|---|
| 13. Vimalanatha | Pig | Jambul | जामुन |
| 14. Anantanatha | Bear | Peepal | पीपल |
| 15. Dharmanatha | Thunderbolt | Scholar Tree | विद्वान वृक्ष |
| 16. Santinatha | Deer | Nandi | नंदी |
| 17. Kunthunatha | Goat | Cluster Fig | अंजीर का पेड़ |
| 18. Aranatha | Fish | Mango | आम का पेड़ |
| 19. Mallinatha | Kalasam | Ashoka | अशोक |
| 20. Munisuvratanatha | Tortoise | Nag Champa | नाग चम्पा |
| 21. Naminatha | Blue Lotus | Bullet Wood | गोली लकड़ी का पेड़ |
| 22. Neminatha | Conch Shell | Bamboo | बाँस का पेड़ |
| 23. Parshvanatha | Serpent | Red Cedar | लाल देवदार का पेड़ |
| 24. Mahavir (Vardhamana) | Lion | Indian Oak Tree | ओक का पेड़ |



சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாம்அவரை
ஆந்தனையும் காப்பர் அறிவுடையோர் – மாந்தர்
குறைக்குந் தனையுங் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாங் கண்டீர் மரம்.

ஔவையார். மூதுரை: 30

# இயற்கைச் சொல்லும் இரகசியங்கள்

இயற்கைச் சூழலோடு இணைந்து வாழும் முறையை, போற்றிப் பாதுகாத்து வந்தனர் நம் முன்னோர்கள். சுற்றுச் சூழல் அமைப்பில் இடம் பெறும் பறவை, விலங்கு, நீர், செடி, கொடி, என அனைத்தையும் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் அவர்களிடம் மேலோங்கியிருந்தது. அப்போது தான் நாம் வாழும் வாழ்க்கை முழுமை பெறும். மரங்களை சார்ந்தே மழையுண்டாகிறது. மழையை சார்ந்தே உயிர்களின் வாழ்வாதாரம் அமைகிறது.

குறிப்பாகத் தமிழினம் நிலங்களை சுற்றுச்சூழல் அமைப்போடு இணைந்து போகும் வகையில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்தாகப் பகுத்துள்ளனர். தங்களையும் இயற்கையையும் பிரித்துப்பார்க்க முடியாதபடி, வாழ்வின் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் இயற்கையோடு இணைத்து அமைத்தனர். ஒவ்வொரு நிலப்பகுதியிலும் இடம்பெறும் பறவை, விலங்கு ஆகியவற்றை அதனதன் வாழ்வியல் தன்மையோடு வாழவிட்டனர்.

கடவுளுக்கு உயிரினங்களை வாகனமாக்கினர். செடி, கொடி, புல், மரங்களை மனித இனம் அழித்துவிடக்கூடாது எனும் உயர்ந்த நோக்கோடு, தல விருட்சங்களாக்கி மரங்களின் தெய்வத்தன்மையை மக்களுக்கு உணர்த்தினர். அந்தந்த நிலப்பகுதியில் சிறப்புப் பெற்ற மரம், செடி, கொடிகளை 'தலமரங்களாக்கி' அவற்றுக்கு மனிதர்கள் மற்றும் பிற உயிரினங்களால் தீங்கு நேராதபடி காத்தனர்.

மன்னர்களும் மக்களும் இணைந்து எடுத்த இத்தகைய பாதுகாப்பு முறையால் தமிழகத்தில் எண்ணற்ற மரங்கள் காப்பாற்றப்பட்டதோடு சுற்றுச்சூழல் சம நிலையும் பாதுகாக்கப்பட்டன. மரங்களும் அடர்ந்த காடுகளும் இருந்த பகுதிகளிலேயே கடவுளின் திருமேனிகளைக் கல்லிலும், மரத்திலும் அமைத்து இயற்கைக்கும் கடவுள் தன்மையைக் கொடுத்தனர். புனிதம் நிறைந்தவையாக மரம், செடி, கொடிகள் போற்றப்பட்டன.

சங்க காலத் தமிழ் இலக்கியங்களில் புன்னை மரம், புங்கமரம் குடும்ப உறுப்பினராக கருதப்பட்டதற்குச் சான்று உள்ளது. மருத்துவ குணம் நிறைந்த மரங்களைக்

கோயிலைச்சுற்றிலும் வளர்த்தனர். மன்னர்களும், ஊர்ச்சபையினரும் இத்தகைய மருத்துவ குணமுள்ள மரங்களைப் பாதுகாப்போருக்கு வரிவிலக்கும் கொடுத்திருந்தனர். சான்றாக உடுமலைப்பேட்டைக்கு அருகே உள்ள கடத்தூரில் அருச்சுனேஸ்வரர் கோயிலில் கிடைத்த கல்வெட்டு ஒன்று சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்தும் மூலிகைத் தாவரத்தை வளர்ப்போருக்கு வரி விலக்கு கொடுத்த செய்தியைக் குறிப்பிடுகிறது.

தமிழ்நாட்டின் பல பகுதிகளில் வேப்ப மரத்தை மாரியம்மனாகவே கருதி வழிபடும் வழக்கம் உள்ளது. இது போல் ஒவ்வொரு மரத்துக்கும் ஒரு ஆற்றல் உண்டு என்பதனை அறிந்திருந்தனர். குறிப்பாக வில்வம், வன்னி, மகிழம், மருதம் போன்றவை மருத்துவ குணம் நிறைந்தவை. தற்பொழுது இந்த மரங்களை காண்பது அரிதாக இருக்கின்றது. வில்வ இலைகளால் சிவபெருமானை பூஜிக்கும் பழக்கம் இன்றும் நடைமுறையில் உள்ளது.

வரம் தருவதால் அது தாவரம் எனவும், விருத்தி அடையச் செய்வதால் அதற்கு விருட்சம் எனப் புராண நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. காஞ்சி ஏகாம்பரர் கோவில் தலமரமாகிய மாமரத்தின் வயது 3500 ஆண்டுகளுக்கு மேற்பட்டது என இரசாயனப் பேராய்வுகள் உறுதி செய்துள்ளன. இன்றும் பருவ காலங்களில் மாங்கனிகள் காய்க்கின்றன.

இதே போல உத்தரகோசமங்கை எனும் திருத்தலத்தில் உள்ள கோவிலில் உள்ள மரம் 3000 வருடத்திற்கு முற்பட்டது என்று சொல்கிறார்கள். கோவையில் உள்ள பேரூர் பட்டீஸ்வரர் ஆலயத்தில் உள்ள இறவாப்புளி, பிறவாப்பனை மரங்கள் தனித்தன்மை கொண்டவை என்று அறிவியல்பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான அம்மன் கோயில்கள் மற்றும் விநாயகர் கோயில்களில் வேப்பமரம், அரசமரம், ஆலமரம் விருட்ச மரங்களாக வழிபடப்படுகின்றன.

ஆதிகாலம் முதல் சுற்றுச் சூழலின் அடிப்படையான பஞ்ச பூதங்களுக்கு உரியனவாகச் சில கோயில் சிறப்பும் பெற்றன. மிகுந்த கவனம் கொண்டுள்ளதற்கு சுற்றுச் சூழல் சான்றாக ஓசோன் படலம் பற்றி மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் உள்ள பூகோள சக்கரத்தில், ஓசோன் படலம் பற்றி உள்ளதைக் கூறலாம்.

அந்தந்த ஊர்களில் இருக்கும் நதி, ஏரி, குளம் போன்றவற்றை தீர்த்தங்களாக கருதி புனிதத் தன்மையுடன் பாதுகாத்து வந்தனர். கும்பகோணத்தில் உள்ள மகாமகத் திருக்குளத்தில் இந்திய நாட்டின் புனித நதிகள் அனைத்தும் உறைவதாகக் கருதப்படும் நம்பிக்கையின் அடிப்படையில், பன்னிரண்டு ஆண்டுக்கு ஒரு முறை மகாமகத் திருவிழா கொண்டாடப்பட்டு வருகிறது.

# தாவரங்களின் வகைபாட்டியல்

பொதுவாக அதன் வாழியல்பை வைத்து புல், செடி, கொடி, மரம் என வகைபடுத்தலாம். புல், செடி மிகக் குறுகிய காலம் 30 நாட்கள் முதல் 1 வருடம் வரை வாழும் இயல்புடையவை. கொடிகள் தரையில் படரும், சில கொடிகள் மரங்கள் போல (woody climber) நீண்ட தூரம் படர்ந்து நீண்ட நாள் உயிர் வாழும். மரம் மிக நீண்ட நாள் உயிர் வாழும் (15 வருடங்கள் முதல் 100 வருடங்களுக்கு மேல்). மரங்களை முப்பெரும் பிரிவாக பிரித்துள்ளனர்

1) வீடுகளில் வளர்க்கப்படும் மரங்கள் (மா, வாழை, பலா, தென்னை மற்றும் பல...)

2) காடுகளில் வளரும் மரங்கள் ( வாகை, பாலை, தேக்கு, கருங்காலி மற்றும் பல...)

3) கோயில் மரங்கள் (அரசு, ஆல். வேம்பு, வில்வம், மகிழம், புன்னை மற்றும் பல...)

# இலையின் வடிவங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. கோடு | 2. ஈட்டி | 3. வட்டம் | 4. நீள்வட்டம் | 5. முட்டை |
| 6. சட்டுவம் | 7. நீள் சதுரம் | 8. இதயம் | 9. கிண்ணாரம் | 10. ஆப்பு |

என வகை படுத்தலாம்.

# இலையின் அமைப்புகள்

| | |
|---|---|
| 1. தனியிலை | 2. கூட்டிலைபோலக் காணும் சிறுகிளை |
| 3. இறகு வடிவக் கூட்டிலை | 4. கைவடிவத் தனியிலை |
| 5. இரட்டைக் கூட்டிலை | 6. ஒற்றைக் கூட்டிலை |
| 7. ஈரிறகு வடிவக் கூட்டிலை | 8. பலவிறகு கூட்டிலை |
| 9. கைவடிவக் கூட்டிலை | 10. ஒரே சிற்றிலையுள்ள கூட்டிலை. |

இலையின் வடிவங்களும் அமைப்பும்
தாவர வகைபாட்டியலில் பெரிதும் பயன்படுகின்றன.

# அகில்

**Family: Thymelaeaceae, Agarwood (*Aquilaria agallocha)***



அகருமரம் எனவும் குறிக்கப்படுகின்றது. அகரு, அகல், அகரு கட்டை, அகிற் கட்டை என வேறு பெயர்களாலும் குறிப்பிடுவர்.

மிக உயரமாக வளரக் கூடிய மரம், மேற்குத் தொடர்ச்சி மலைக் காடுகளில் காணப்படுகிறது. இறகுக்கூட்டிலைகளையும், சமமற்ற சிற்றிலைகளையும் உடையது.

இதன் கட்டை மணமுடையது. சந்தனம்போல் மணப்பொருளாய் பயன்பாட்டில் உள்ளது. இதன் தூளை தணலில் இட்டால் எழும் புகையானது மிகவும் நறுமணம் கொண்டதாக இருக்கும். இதன் நறுமணத்தை நுகர்ந்தால் வாந்தி, மயக்கம் நீங்கும்.

இம்மரத்தின் கட்டை மருந்தாக பயன்படுகிறது. திருக்காறாயில் கண்ணாயிரமுடையார் என்னும் தலத்தின் தலமரம் அகில் மரமாகும்.

# அசோகம்

**Family: Caesalpiniaceae, Ashoka Tree (*Saraca asoca*)**

அசோகமரம் நமது கலாச்சாரத்தில் தொன்று தொட்டு விளங்கும் மரமாகும். இராமயணத்திலும், ஆரிய வைத்தியம் மற்றும் யுனானி மருத்துவத்திலும் கூறப்பட்டு இன்றும் மருந்தாக பயன்படுத்தக்கூடிய மிக முக்கிய மரமாகும்.



இந்திய மண்ணில் எங்கும் வளரக்கூடியது. குறிப்பாக, இந்தியாவின் வடமேற்குப் பகுதிகளில் அதிகம் வளர்கிறது. நீண்ட கூட்டிலைகளையும் செந்நிற மலர்களையும் உடைய கிளைகளைப் பரப்பி வளரக் கூடிய மரம். அழகு தரும் மரமாக வளர்க்கப் படுவதுண்டு.

தற்பொழுது அழிவின் விளிம்பில் இந்த மரங்கள் இருப்பதாக கூறப் படுகிறது. பிப்ரவரியில் பூக்கத் தொடங்கி ஆகஸ்டு வரை காய்கள் பழுக்கும். பட்டை,பூ ஆகியவை மருத்துவகுணம் கொண்டவை. நீண்டகாலமாக அசோகமரமும் நெட்டிலிங்க மரமும் ஒன்றே எனப் பலரால் கருதப்பட்டது. அசோகமரம் மிகவும் குறுகிய கிளைகளைப் பரப்பி வளரக்கூடிய இயல்புடையது. நெட்டிலிங்கம் நேராக சுமார் 30 அடிக்கு மேல் கிளைகள் இல்லாமல் செங்குத்தாக வளரும் இயல்புடையது.

அசோகமரத்தின் மருத்துவ குணங்கள் அறிவியல் ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளன. 19ம் தீர்த்தங்கரர் மல்லிநாத சுவாமி இந்த மரத்தின் கீழ் தவம் புரிந்து ஞானம் பெற்றார். திருமாலிருஞ்சோலை, கோவை, ஆர்.எஸ். புரம் கற்பகவிநாயகர் கோவில் ஆகிய திருத்தலங்களில் தலமரமாக உள்ளது. இம் மரம் விதை மூலம் பெருக்கம் செய்யப்படுகிறது

# அத்தி

**Family: Moraceae, Cluster Fig (*Ficus racemosa*)**



அத்தி மரம் ஆற்றுப் படுகைகளிலும், களிமண், செம்மண் நிலப்பகுதிகளிலும், மற்றும் தமிழகத்தின் எல்லா மாவட்டங்களிலும் நன்கு வளரும் இயல்புடைது. மாற்றடுக்கில் அமைந்த நீள் வட்ட இலை. பூங்கொத்து வெளிப்படையாக தெரியாது. இதைத்தான் அத்திப் பூத்தார் போல் என்பார்கள்.


அத்திப் பூவைப் பார்ப்பது மிக அரிது. இது அனைத்துப் பருவங்களிலும் காய்க்கும் தன்மையுடையது. அடிமரத்திலும் மற்றும் கிளைகளிலும் கொத்துக் கொத்தாக காய்க்கும்.

பழம் இனிப்பும், துவர்ப்பும் கலந்த சுவையுடையது. இரத்த விருத்திக்குப் பயன்படும். சென்னை, செங்கல்பட்டு பகுதியில் உள்ளவர்கள் அத்திக் காயை சமையலுக்கு பயன்படுத்துகிறார்கள்.

இதன் இலை, பட்டை, பழம் ஆகியன மருத்துவப் பயனுடையவை விதை மற்றும். பதியன் மூலம் அபிவிருத்தி செய்யப்படுகிறது. 17ம் தீர்த்தங்கரர் குந்துநாத சுவாமி இந்த மரத்தின் கீழ் தவம் புரிந்து ஞானம் பெற்றார். திருக்கானாட்டுமுள்ளூர் பதஞ்சலிநாதர் கோவிலில் அத்தி இரண்டாவது தலமரமாக உள்ளது. பறவைகள், அணில், அத்திப் பழத்தை உண்பதன் மூலம், இதன் விதை பல இடங்களுக்கு பரவி அபிவிருத்தி ஆகிறது.

# அரசு

**Family: Moraceae, Peepal Tree (*Ficus religiosa*)**



அரச மரம் கூரிய இலைகளை உடைய பெருமரம், இதன் இலை நீண்ட கூரிய முனையுடன் கூடிய இதய வடிவம் கொண்டது. இதன் பூர்வீகம் இந்தியா, இலங்கை, சீனா, நேபாளம் உள்ளிட்ட நாடுகள் தான். இது தமிழகம் எங்கும் வாய்க்கால்கரை, குளக்கரை, கிராமத்து எல்லை ஆகிய இடங்களில் வளரும் பெருமரமாகும்.

இலை முட்டை வடிவில் மாற்றடுக்கு அமைப்புடையது. இலைத் தளிர் செம்பொன் நிறமாகவும் முற்றிய இலை கரும் பச்சையாகவும் இருக்கும். இதன் இலை, பட்டை, பழம் ஆகியன மருத்துவப் பயனுடையவை. பிப்ரவரி மாதம் முதல் ஜீன் மாதம் வரை மரத்தின் அடிப்பகுதியில் இருந்து மேல் பகுதி வரை காய்கள் நிறைய காய்க்கும். அரசமரம் மும்மூர்த்திகளான சிவன், பிரம்மா, விஷ்ணு ரூபமாகும். 6ம் தீர்த்தங்கரர் பத்மபிரபநாத சுவாமி, 14 ம் தீர்த்தங்கரர் அனந்தநாத சுவாமி ஆகியோர் இந்த மரத்தின் கீழ் தவம் புரிந்து ஞானம் பெற்றனர்.

திருநல்லம் உமாமகேஸ்வரர், வானூர், விழுப்புரம் அரசிலிநாதர், கோயமுத்தூரில் உள்ள புலியகுளம் முத்திவிநாயகர், ராம்நகர், கோதண்டராமர் மற்றும், வடவள்ளி காட்டுவிநாயகர் ஆகிய கோவில்களில் தவிர 10க்கும் மேற்பட்ட கோவில்களில் அரசு தலமரமாக விளங்குகிறது. இது திருவாவடுதுறை தலத்தில் படர்ந்து காணப்படுவதால், படர் அரசு எனப்படுகிறது. ஒரிசா, பீகார் மற்றும் ஹரியாணா மாநிலங்களின் மாநில மரம் அரச மரமாகும். இம் மரம் விதை மூலம் பெருக்கம் செய்யப்படுகிறது. தமிழகத்தில் பெரும்பாலும் அரசமரம் இல்லாத ஊர் இல்லை என்று கூறலாம்.

# அலரி

**Family: Apocynceae, Oleander (*Nerium indicum*)**





இது செடியாக வளர்வது அதிக அளவில் கோயில்களிலும், பூங்காக்களிலும், வீட்டுத் தோட்டங்களிலும் மற்றும் சாலையோரங்களிலும் மலர்களுக்காகவும், அலங்காரத் தாவரமாகவும் வளர்க்கப்படுகிறது.

மலர்கள் சிகப்பு, மஞ்சள், வெள்ளை மற்றும் குங்கும வண்ணங்களில் இருக்கும். ஒற்றை அலரி, அடுக்கு அலரி என இரு வகை உண்டு. பதியன் மூலம் அபிவிருத்தி செய்யப்படுகிறது.

திருக்கரவீரம் கரவீர நாதர், திருக்கள்ளில் (பெரியபாளையம், சென்னை) சிவானந்தேஸ்வரர் ஆகிய இரு தலங்களில் தலவிருட்சமாக உள்ளது. இதன் மலர் தெய்வத்துக்கென உரியது. மல்லிகை, முல்லைபோல மகளிர் தலையில் சூடிக் கொள்வதில்லை.

தேசிய ஆறுவழிச் சாலை நடுவில் தடுப்புக்காக அதிக அளவில் வளர்க்கப் பட்டு வருகிறது. மிகவும் வேகமாக வளரும் இயல்புடையது, குறைந்த நீர் போதுமானது, இரவு நேர வாகனம் ஓட்டுபவர்களுக்கு ஒலி, ஒளி தடுப்பானாக பயன்படுகிறது.

# அழிஞ்சில்

**Family: Alangiaceae, Hill sack Tree (*Alangium salvifolium*)**



தமிழகம் எங்கும் மலைப்பகுதி களிலும், சமவெளி சார்ந்த காடுகளிலும் பரவலாகக் காணப்படும் மரம். அழிஞ்சல், ஊஞ்சல் மரம் என்ற வேறு பெயர்களும் இதற்கு உண்டு.

மாற்றடுக்கில் வேல் முனையை ஒத்த இலைகள் மணம் வீசும் வெண் மஞ்சள் மலர்கள். நீள் வட்டவடிவான செவ்வூதா நிறப் பழங்கள்.

இதன் வேர், பழம், விதை ஆகியன மருத்துவப் பயன் தருபவை. இனிப்புச் சுவையுடைய பழம் மலச்சிக்கலை அகற்ற உதவுகிறது.

மேலும் உடலுக்கு குளுமை தரும். வேரின் பட்டை வெறி நாய்க்கடி, எலிக்கடி ஆகியவற்றின் விஷத்தை முறிக்கும். விதை மூலம் இனப்பெருக்கம் செய்யப்படுகிறது.

சிங்க பெருமாள் கோவில், திருவள்ளூர் சதுர் வேதேஸ்வரர், கன்னிமார்பாளையம் (திண்டுக்கல்), மொண்டிப்பாளையம் (கோயமுத்தூர்) வெங்கடேசப்பெருமாள் ஆகிய தலங்களில் அழிஞ்சில் தலமரமாக உள்ளது.

# ஆத்தி

**Family: Caesalpiniaceae, Orchid Tree (*Bauhinia racemosa*)**



ஆத்தி என்பது அடர்த்தியாக கிளைகள் பரப்பி வளரக் கூடிய சிறு மரமாகும். இது இந்தியா முழுவதும் பரவலாக காணப்படக்கூடிய மந்தாரை மரமாகும்.

இலைகள் இரண்டு சிற்றிலைகள் சேர்ந்த கூட்டிலைகள். டிசம்பர் முதல் மார்ச் மாதம் வரை பூக்கும். மலர்கள் வெள்ளை கலந்த மஞ்சள் நிறத்தில் காணப்படும். காய்கள் இளம் பச்சை நிறம் கொண்டு கனியாகும்போது பழுப்பு நிறமாகிவிடும்.

இம்மரத்தின் பட்டை, இலை மருத்துவ குணம் வாய்ந்தவை. கிராமப் புறங்களில் இதன் இலையானது ஆடு, மாடுகளுக்கு வயிற்றுப் புழுக்களை அகற்ற உணவாகப் பயன்படுகிறது.

திருவாப்பாடி, பாலுகந்தநாதர், திருச்செங்காட்டாங்குடி கணபதீஸ்வரர், குத்தாலம் உத்தவேதீஸ்வரர், மற்றும் திருசிற்றேமம் (பொன்னிரை, திருவாரூர்) சுவர்ண ஸ்தாபனேஸ்வரர் ஆகிய தலங்களில் ஆத்தி தலமரமாக உள்ளது. விதை மூலம் இனப்பெருக்கம் செய்யப்படுகிறது. அந்த காலத்தில் ஆத்தி மரம் நிறைந்த பகுதிதான் இன்றைக்கு ஆற்காடு என்ற பெயரில் அழைக்கப்படுகிறது.

# ஆமணக்கு

**Family: Euphorbiaceae Castor oil plant (*Ricinus cummunis*)**

கும்பகோணத்திற்கு அருகாமையிலுள்ள கொட்டையூர் (கோடீச்சுவரம்) கோடீஸ்வரர் தலத்தில் தலமரமாக விளங்குகிறது. இதன் இலை உள்ளங்கை வடிவத்தில் பல விளிம்புடன் மாற்றடுக்கில் அமைந்திருக்கும்.



விதை கொட்டைமுத்து எனப்படுகிறது. இதிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய் விளக்கெண்ணெய் (Castor oil) எனப்படுகிறது. தமிழகமெங்கும் புஞ்சை பயிராக விளைவிக்கப் படுகிறது.

தரிசு நிலங்களில் தானாக வளரும் இயல்பை உடையது. இலை, வேர், எண்ணெய் ஆகியவை மருத்துவப் பயனுடையதாகும். விளக்கெண்ணை வயிற்றுவலி, குடலிறக்கம் விரைவாதம் ஆகியவற்றை குணமாக்கும்.

இச்செடி விதை மூலம் இனப்பெருக்கம் செய்யப்படுகிறது.

# ஆல்

**Family: Moraceae, Banyan Tree (*Ficus benghalensis*)**



ஆலமரம் என்பது மிகவும் விசேஷமான மரம். "ஆல் போல் தழைத்து அருகு போல் வேரோடி நீண்ட காலம் வாழ்க" என்று பெரியவர்கள் வாழ்த்தும் போது பெரிய மரங்களைத் தான் சொல்வார்கள். அதில் தழைப்பிற்கு உரிய மரம் ஆலமரம் என்பதால் தழைத்து ஓங்கி கிளை கோத்திரமாக வாழ்வது என்பது பொருளாகும்.

'ஆலும் வேலும் பல்லுக்குறுதி. நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி' என்பது முதுமொழி. நாலடியாரும், திருக்குறளும் படித்தால் வாழ்க்கை சிறக்கும். வேலும் என்பது கருவேலங் குச்சியை குறிக்கும்.

ஆலங் குச்சியும், வேலங்குச்சியும் பயன்படுத்திப் பல் துலக்கினால் ஈறுகள் வலுவடையும். பல் தேய்க்கும் போது கெட்ட பித்த நீர்களெல்லாம் உமிழ் நீரோடு கலந்து வெளியே வந்துவிடும்.

ஆலமரம் மிகவும் புனிதமாகக் கருதப்பட்டது. இந்து, புத்தம் மற்றும் ஜைனம் ஆகிய மூன்று மதத்தைச் சார்ந்த பல மகான்கள், சித்தர்களெல்லாம் அமர்ந்து தவநிலை அடைந்திருக்கிறார்கள். முதல் தீர்த்தங்கரர் ரிஷபநாத சுவாமி இந்த மரத்தின் கீழ் தவம் புரிந்து ஞானம் பெற்றார்.

இந்த மரத்தின் கீழ் அமர்ந்திருந்தால் குளிர் சாதனத்தை விட நன்றாக இருக்கும். மரத்தின் நிழல் அக்னி நட்சத்திரக் காலத்தில் கூட குளிர்ச்சியாக இருக்கும். ஏனென்றால் அதனுடைய இலை அமைப்பில் அதிகமான குளோரோபில் பச்சையம் அமைந்திருக்கிறது. மேலும், குறைந்த அளவு மெழுகுத் தன்மையுடன் இருக்கும். அதனால் வெப்பம் அதிகமாகத் தாக்காத அளவிற்கு காக்கிறது.



மதில் சுவர் மற்றும் உபயோகம் இல்லாத வீடுகளின் சுவர்களிலும் ஆலமரச் செடிகளை அதிக அளவில் பார்க்கலாம். ஆலமரத்தின் விதைகள் பழம் உண்ணும் பறவைகள் மற்றும் பாலூட்டிகளால் பரப்பபடுகிறது. விதை மற்றும் பதியன் மூலம் பெருக்கம் செய்யப்படுகிறது.



திருவாலங்காடு வடாரண்யேஸ்வரர், திருவாலம் பொழில் (திருவையாறு) ஆத்மநாதேஸ்வரர், மதுரை பேச்சியம்மன் தலங்கள் அல்லாது 10 க்கும் மேற்பட்ட தலங்களில் ஆலமரம் தலமரமாக உள்ளது.

அய்யாவாடியில் உள்ள பிரத்யங்கிரா தேவி கோயில் தலவிருட்சமான ஆலமரம் ஐந்து வடிவ இலைகளை கொண்டிருப்பது விசேஷம். உலகிலேயே பெரிய ஆலமரம் கல்கத்தா தாவரவியல் பூங்காவில் உள்ளது. இந்தியாவின் தேசிய மரம் ஆலமரமாகும்.

# இலந்தை

**Family: Rhamnaceae, Indian plum (*Ziziphus mauritiana*)**





தமிழகம் எங்கும் இலையுதிர் காடுகள், புஞ்சை நிலங்கள் ஆகியவற்றைச் சார்ந்து வளரும் முள்ளோடு கூடிய நடுத்தர மரம். இலந்தைக்கு குல்லதி, குல்வி, கோல், கோற்கொடி, வதரி என பல பெயர்கள் உண்டு.

நீள் வட்டமான இலையின் முனை பல்லமைப்புக் கொண்டது. பழம் உடல் உஷ்ணத்தை தணிக்கக்கூடியது. கோடை காலத்தில் கிடைக்கும் பழங்களில் இதுவும் ஒன்று. பழத்தில் வைட்டமின் ஏ, சுண்ணாம்புச் சத்து மற்றும் இரும்பு சத்து உள்ளன. பழம் உடம்புக்குக் குளிர்ச்சி தருவதோடு பசியின்மையை போக்கும். சோர்வால் வரும் உடல்வலியையும் அகற்றும்.

இதன் வேர், இலை, பட்டை, கொட்டை ஆகிய அனைத்தும் மருத்துவப் பயனுடையவை விதை மூலம் பெருக்கம் செய்யப்படுகிறது.

திருக்குரங்கனில் முட்டம் வாலீஸ்வரர், பவானி (ஈரோடு) சங்கமுகநாதேஸ்வரர், திருவெண்பாக்கம் (பூண்டி, திருவள்ளூர்) ஊண்றீஸ்வரர் தவிர இன்னும் 4 தலங்களில் தல மரமாக விளங்குகின்றது.

# இலுப்பை

**Family: Sapotaceae, South India Mahua (*Madhuca longifolia*)**



தமிழகத்தில் அதிக அளவில் தோப்பாக வளர்க்கப்பட்டு, சாலை ஓரங்களில் நிழல் தரும் மரமாகவும் இலுப்பை இருந்தது. ஆனால் தற்பொழுது குறைந்த எண்ணிக்கையிலேயே காணப்படுகிறது.

“ ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை’” என்பது முதுமொழி. தமிழ்நாட்டில் பழங்காலத்தில் இலுப்பைப் பூவிதழ்களை சர்க்கரையினை போலப் பயன்படுத்தினர்.

கிளை நுனியில் கொத்தாக அமைந்த இலைகளைக் கொண்டது. வெள்ளை நிறத்திலான கொத்தான மலர்கள், நீள் முட்டை வடிவிலான காய்கள். பிப்ரவரி மார்ச்–ல் பூத்து ஏப்ரல்– ஜீன் காய்கள் பழுக்கத் தொடங்கும். பழந்தின்னி பறவைகள், பாலூட்டிகள் மூலம் இப்பழம் வேறு இடத்திற்கு பரவுகிறது.

தேர்களில் இடம்பெறும் சிற்பங்களைச் செதுக்க இலுப்பை மரங்களே பெரிதும் பயன்படுத்தப்பட்டன. எண்ணெய்க்காக கோவில் நிலங்களில் இலுப்பை தோப்பாக வளர்க்கப்பட்டது. காடுகளில் தானே வளர்கிறது. இலை, பூ, காய், பழம், பட்டை ஆகியவை மருத்துவப் பயனுடையவை.

விதை மூலம் பெருக்கம் செய்யப்படுகிறது. திருச்செங்கோடு அர்த்தநாரீஸ்வரர், இலுப்பைப்பட்டு (மணல்மேடு, மயிலாடுதுறை) நீலகண்டர், தலங்களில் தல மரமாக விளங்குகின்றது.

# ஊமத்தை

**Family: Solanaceae, Devils Trumpet (*Datura metel*)**





இது குறுஞ்செடி வகையை சார்ந்தது தமிழகம் எங்கும் சாலை ஓரங்களிலும், தரிசு நிலங்களிலும் வளரும் செடியாகும்.

அகன்ற இலைகளை யும் நீண்ட புனல் வடிவ பூக்களையும் உடையது. பூக்கள் வெள்ளை, மஞ்சள் மற்றும் கருஞ்சிவப்பு நிறத்தில் இருக்கும்.

ஊமத்தஞ் செடியின் அனைத்து பாகங்களும் மருத்துவ பயனுடையவை. விதை மூலம் பெருக்கம் செய்யப்படுகிறது.

திருமணஞ்சேரி அருள்வள்ளல் நாயகர், தலத்தின் தலமரமாக விளங்குகிறது.





# எருக்கு

**Family: Asclepidaceae, Crown Flower (*Calotropis gigantea*)**



எருக்கு செடி வகையைச் சார்ந்தது. ஒரு ஆள் உயரம் வரை வளர்ந்து, படர்ந்து கிளைகள் விட்டு வளரும்.

கிளையின் நுனியில் மலர்கள் கொத்து கொத்தாகப் பூக்கும். காய் நன்கு முற்றிய பின் வெடித்து பஞ்சாக மாறி காற்றில் பறந்து சென்று இடம் பெயரும்.

தமிழகத்தின் எல்லா பகுதிகளிலும் தானாக எருக்கன் செடி வளர்கிறது திருஎருக்கட்தம்புலியூர் (ராஜேந்திரப்பட்டினம்) நீலகண்டேசர், திருக் கானாட்டு முள்ளூர் பதஞ்சலீசுவரர், திருமங்கலக்குடி பிராண வரதேஸ்வரர் ஆகிய திருக் கோயில்களில் தலமரமாக விளங்குவது எருக்கு ஆகும்.

எருக்கத்தம் புலியூரில் விழாக் காலங்களில் வெள்ளெருக்கம் பூவால் பூசிக்கப் படுகிறது. திருக் கானாட்டு முள்ளூரில் வெள்ளெருக்குடன் அத்தியும் தலமரமாக உள்ளது. பிள்ளையார் சதுர்த்தி அன்று எருக்கம்பூ மாலை, அருகம்புல் சகிதமாக மக்கள் கூட்டம் கூட்டமாக பிள்ளையாரை தரிசிக்க செல்வார்கள். எருக்கு விதை மூலம் இனப்பெருக்கம் செய்யப்படுகிறது.

# எலுமிச்சை

**Family: Rutaceae, Lemon ( *Citrus limon*)**





எலுமிச்சை முள்ளுள்ள சிறுமர வகுப்பைச் சார்ந்த மரமாகும். சுமார் 15 அடி உயரம் வரை வளரும். தமிழகம் முழுவதும் வீட்டுத் தோட்டங்களில் வளர்க்கப் படுகிறது.

நாட்டு எலுமிச்சை, கொடி எலுமிச்சை, மலை எலுமிச்சை என மூன்று வகை உண்டு இலைகள் எதிர் அடுக்கில் அமைந்து இருக்கும். காய் உருண்டை மற்றும் முட்டை வடிவில் இருக்கும். எலுமிச்சம் பழம் வைட்டமின் 'சி' நிறைந்த பழமாகும்.

எல்லா சுபகாரியங் களிலும், கோயில் பூஜையிலும் எலுமிச்சம் பழம் முக்கிய பங்கு வகிக்கிறது. இதன் பயன்பாடு, மருத்துவ குணம், மஞ்சள் நிற மங்களம் கருதி எலுமிச்சையை அரச கனி என்பர்.

திருமாகறல், திருமாகறலிஸ்வரர், அன்னியூர் (குடவாயில், தஞ்சாவூர்) ஆபத்சகாயேசுவரர் திருக்கோயில்களின் தலமரம் எலுமிச்சை ஆகும். விதை மூலம் பெருக்கம் செய்யப் படுகிறது.

# கடம்பு

**Family : Rubiaceae, Wild chincona (*Anthocephalus cadamba*)**





நீரோட்டமுள்ள கரைகளில் இது செழித்து வளரும். கொத்தாக உருண்டு பூக்கும் இதன் மலரின் நிறம் வெள்ளை கலந்த மஞ்சள்.

முற்காலத்தில் மதுரை கடம்ப மரங்களின் சோலையாக இருந்தது என்றும், இந்த மரங்களை அழித்துத் தான் மதுரை நகரம் தோன்றியதாகவும் இதன் காரணத்தாலேயே மதுரைக்கு கடம்பவனம் என்ற பெயர் உண்டு என்றும் தலபுராண வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

12ம் தீர்த்தங்கரர் வாசுபூஜ்யநாத சுவாமி இந்த மரத்தின் கீழ் தவம் புரிந்து ஞானம் பெற்றார். திருக் கடம்பந்துறை (குழித்தலை கடம்பர் கோயில்) திருக்கடம்பூர், திருஆலவாய் மதுரை) சோமசுந்தரக் கடவுள், திருகடம்பந்துறை (குளித்தலை, கருர்) கடம்பவனேச்சரர் ஆகிய தலங்களில் தல மரமாக விளங்குகின்றது. இத் திருக் கோயில்கள் சார்ந்த ஊரும் மரத்தின் பெயரால் அமைந்து உள்ளன.

விதை மூலம் பெருக்கம் செய்யப்படுகிறது. 1977 ஆம் ஆண்டு இந்திய அரசால் அஞ்சல் தலையில் பொறிக்கப்பட்ட பெருமையுடையது இம்மரம். கடம்ப மர இலைகள் நீரிழிவு நோய்க்கு மருந்தாகவும், கால்நடைகளுக்கு தீவனமாகவும் பயன்படுகிறது.

# கல்யாணமுருங்கை

**Family: Fabaceae, Coral Tree (*Erythrina indica)***




திருமணச் சடங்குகளில் பயன்படுத்தப் படுவதால் கல்யாண முருங்கை என பெயர் பெற்றது. முள் முருங்கை எனறும் அழைக்கப்படும்.

இந்தியாவின் இலையுதிர் காடுகளில் அதிகமாக காணப்படும். தோட்டங்களில் வேலிக்காகவும், சாலை ஓரங்களிலும் அழகுக்காகவும் வளர்க்கப்படும் மரமாகும்.

வெற்றிலை, மிளகு முதலிய கொடிவகைத் தாவரங்கள் பயிரிடப்படும் இடங்களில் அவை வளர்வதற்கு ஆதாரமாக கல்யாண முருங்கை மரம் வளர்க்கப்படுகின்றது.

மலர்கள் சிவப்பு நிறத்தில் இருக்கும். இதன் விதை, இலை, பட்டை ஆகியவை மருத்துவகுணம் உடையவை. இன்றைக்கும் சிலக் கிராமங்களில் கல்யாண முருங்கை அடை செய்வார்கள்.

பாரிமுனை (பாரிஸ், சென்னை) கச்சாலீஸ்வரர், கோயிலின் தலமரம் கல்யாணமுருங்கை. இம் மரம் விதை மற்றும் பதியன் மூலம் பெருக்கம் செய்யப்படுகிறது.

# கண்டங்கத்திரி

**Family: Solanaceae, Yellow-fruit nightshade *(Solanum xanthocarpum)***

தமிழகத்தில் மிகப் பரவலாக காணப் படக்கூடிய செடியாகும். தாவரம் முழுவதும், இலையிலும் கூர்மையான முட்களை கொண்டது. மாற்றடுக்கில் அமைந்த இலைகள். பூக்கள் நீல நிறமானவை, சிறு கத்தரிக்காய் வடிவிலான காய்கள் பழுத்ததும் மஞ்சள் நிறமாகும்.

கண்டங்கத்திரியின் இலை, பூ, காய், விதை, வேர் என அனைத்து பாகங்களும் சித்த, ஆயுர்வேத மருத்துவத்தில் உபயோகப் படுத்தப்படுகிறது.

கண்டங்கத்திரி காய் முக்கியமாக இருமல், சளி மற்றும் குளிரினால் வரும் காய்ச்சல் போன்ற அனைத்து சுவாச சம்பந்தமான நோய்களின் சிகிச்சைக்கு பயன் படுத்தப்படுகிறது.

விதை மூலம் இனப்பெருக்கம் செய்யப்படுகிறது. திரு பருப்பதம் (ஸ்ரீசைலம், ஆந்திரா மாநிலம்) தலத்தின் தலமரம் கண்டங்கத்திரி.





# கல்வாழை

**Family: Cannaceae, Canna Plant (*Canna indica*)**







மணிவாழை, மருகல் என்றும் அழைக்கப்படும். இது மிக அதிக அளவில் பூங்காக்களிலும், வீட்டுத் தோட்டங்களிலும் அலங்காரத் தாவரமாக வளர்க்கப்படுகிறது. மலர்கள் மஞ்சள், சிகப்பு, ஆரஞ்சு போனற வண்ணங்களில் இருக்கும்.

கழிவு நீர் வரும் வாய்க்கால்களில் இந்த செடியை வளர்த்தால், கழிவு நீரை சுத்தம் செய்யும் தன்மை இந்தச் செடிக்கு உண்டு. அதன்பின் அந்த நீரை மற்றச் செடிகளுக்கு பாய்ச்சலாம்.

திருமருகல் நன்னிலம், மயிலாடுதுறை மாணிக்க வண்ணர் திருக்கோயிலின் தலமரம் கல்வாழை செடி ஆகும்.

கல்வாழை செடிகள் விதை மற்றும் கிழங்கு மூலம் பெருக்கம் செய்யப்படுகிறது. அலங்காரக் கல்வாழைகளை வீட்டில் வளர்த்துத் தோட்டத்தை வளப்படுத்துவோம்.

# கடுக்காய்

**Family: Combretaceae, Myrobalan *(Terminalia chebula)***




இந்தியாவை தாயகமாக கொண்ட கடுக்காய் மரம் சுமார் 50 முதல் 60 அடி உயரம் வரை வளரும். இம்மரம் குளிர் காலத்தில் இலையுதிர்ந்து மார்ச், ஏப்ரல் மாதத்தில் துளிர் விடும். எதிரடுக்கில் அமைந்த இலைகள் முட்டை வடிவில் இருக்கும்.

இதன் காயானது சித்த மருத்துவத்தில் திரிபலா என்ற மருந்து செய்யப் பயன் படுகிறது. கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் மூன்றும் கலந்த ‘திரிபலா’ சூரணத்தை அடிக்கடி நீரில் கலந்து குடிக்க உடல் பலம் ஏற்படும். வயிற்றுக் கோளாறு மாறும்.

பழங்காலத்து கோயில்கள் கட்டமைப்பில் சுண்ணாம்பு, முட்டையுடன் கடுக்காயும் பயன்படுத்தப் பட்டது. திருக்கொருக்கை, (நாகப்பட்டினம்) திருத் தலத்தின் தலமரமாக விளங்குவது கடுக்காய் மரமாகும். இம்மரம் விதை மூலமாக பெருக்கம் செய்யப்படுகிறது.

# கருங்காலி

**Family: Ebenaceae, Malabar Ebony (*Diospyros ebenum*)**



இந்தியாவை தாயகமாக கொண்ட இம்மரம் மேற்கு தொடர்ச்சி மலையில் அதிகம் காணப் படுகிறது. இரும்பை ஒத்த உறுதியுடைய கருப்பு நிற பலகை இம்மரத்தில் இருந்து பெறப்படுகின்றன. குறிப்பாக நடுப்பாகமான கருமை நிறம் கொண்டப் பகுதியை மதிப்பு மிக்க வைரம் என்பர்.

துவர்ப்புத் தன்மை மிக்க இதன் பட்டை, பிசின், வேர் அதிக மருத்துவப் பயன் கொண்டவை. மார்ச் மாதம் பூக்கத் தொடங்கி மே–ஜீலையில் காய்கள் பழுக்கத் தொடங்கும். கேரளாவில் கருங்காலி மரப்பட்டையை நீர் சேர்த்து நன்றாகக் காய்ச்சி (தாகமுக்தி' என்ற பொடி) குடிநீராக பயன்படுத்தப் படுகின்றது.

கருங்காலி மரத்தில் இருந்தே "உலக்கை" செய்யப்படுகிறது. திருஅம்பர் மாகாளம் (நன்னிலம், திருவாரூர்) மாகாளேஸ்வரர் திருக்கோயிலில் தல மரமாக விளங்குவது கருங்காலி மரம் ஆகும்.

# கல்லத்தி

**Family: Moraceae, Stone Fig (*Ficus tinctoria*)**

இது அத்தி மரங்களில் ஒரு வகையாகும். பொதுவாக பாறைகள் இடுக்கில் வளரும் இயல்புடையது. அதனால் தான் கல்லத்தி என்று கூறப் படுகிறது.

இது ஒரு அரிய வகைத் தாவரம் ஆகும். கல்லுக்குள் ஈரம் என்பார்களே, அந்த ஈரத்தை உறிஞ்சிதான் இந்த மரம் வளர்வதாக கூறப்படுகிறது.

சிறிய ஆலிலை வடிவில் கரும் பச்சையான இலைகளையும் இலைக்கோணங்களில் மெல்லிய கணையுடைய காய்களையும் கொண்ட வெண் பச்சையான மரம்.

பிப்ரவரி – மே மாதம் வரை காய்கள் பழுக்கத் தொடங்கும். இம் மரத்திலிருந்து வரும் பால் எலும்பு முறிவு போன்ற பிரச்சனைகளை சரிசெய்யவல்லது. திருப்பரங்குன்றம் (மதுரை) சுப்பிரமணியசுவாமி, தலத்தின் தலமரம் கல்லத்தி மரம் ஆகும்.



# காரை

**Family: Rubiaceae, tanthium *(Canthium parviflorum)***





கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் அருகிலுள்ளது காரமடை. முன்பு இங்கு காரை மரங்கள் அதிகமாக வளர்ந்திருந்தன. அதனால் இது காரமடை என அழைக்கப்படலாயிற்று.

இவ்விடத்தில் சுயம்பு வடிவாக அரங்கநாத பெருமாள் எழுந்தருளியுள்ளார். காரை மரம், இங்கு தல விருட்சமாக விளங்குகிறது.

காஞ்சிபுரத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள கச்சிநெறிக் காரைக்காடு சத்திய விரதேஸ்வரர் திருத்தலத்தின் தலமரமும் காரை மரமே ஆகும்.

இது இலையும் முள்ளும் மாற்றடுக்கில் அமைந்த குத்துச் செடி. பச்சைநிறக் காய்களையும், மஞ்சள்நிற பழங்களையும் கொண்டுள்ளது. பழங்கள் உண்ணக்கூடியவை.

காரை மரத்தின் இலை, பழம் முதலியன மருத்துவப் பயனுடையனவாக உள்ளது.

# காட்டாத்தி

**Family: Caesalpiniaceae, Orchid Tree (*Bauhinia tomentosa*)**

காட்டாத்தி ஒரு மூலிகை மரமாகும், இதன் இலை இரண்டாக பிரிந்து இருப்பதால் இதை இருவாட்சி என்றும் அழைப்பார்கள்.

இது தமிழகக் காடுகளிலும், பூங்காக்களிலும் அதிக அளவில் காணப்படும் மரமாகும்.

இம்மரத்தின் இலை, பூ, காய் ஆகிய அனைத்தும் மருத்துவப் பயனுடையவை.

காட்டாத்தியானது வருடம் முழுவதும் பூத்து காய்க்கும் தன்மையுடையது.

திருஆப்பாடி, திருச்சிற்றேமம் சுவர்ண ஸ்தாபனேஸ்வரர், திருச் செங்காட்டங்குடி ஆத்தி வனநாதர், முதலிய திருக் கோயில்களில் காட்டாத்தி தலமரமாக உள்ளது.

விதை மூலம் பெருக்கம் செய்யப்படுகிறது.





# கிளுவை

**Family: Burseraceae, Hill Mango *(Commiphora caudata)***



கிளுவை வேலிக்காக வளர்க்கப்படும், மென்மையான கட்டை உடைய இலையுதிர் சிறுமரமாகும்.

முக்கூட்டிலை அமைப்பு. இதன் இலை, பட்டை மருத்துவப் பயனுடையவை. வருடம் முழுவதும் பூத்து காய்க்கும் தன்மையுடையது.

திருக்கடைமுடி (கீழையூர், செம்பனார் கோயில்) கடைமுடி நாதர், கருமத்தம்பட்டி (கோயம்புத்தூர்) வாழைத் தோட்டத்து அய்யன் திருத் தலங்களின் தலமரமாக விளங்குவது கிளுவை மரமாகும். இம்மரம் பதியன் மூலம் அதிக அளவில் பெருக்கம் செய்யப்படுகிறது.





# குரா

**Family: Rubiaceae, Asiatic Tarenna (*Tarenna asiatica*)**

குரா மரம் பசுமை மாறா சிறு மர வகையாகும். இம்மரம் 5 மீ. உயரம் வளரும். இலை நீளமான கூர் முனையுடையது.

பூக்கள் மஞ்சள் கலந்த வெள்ளை நிறத்தில் இருக்கும். மேற்கு தொடர்ச்சி மலையின், அகஸ்தியமலை, ஆனைமலை காடுகளில் அதிக அளவில் காணலாம்.

திருத்தண்டலை நீள்நெறி (தண்டலைச்சேரி, திருவாரூர்) நீள்நெறிநாதர், திருவிடைக் கழி (தில்லையாடி, மயிலாடுதுறை) யோக சுப்பிரமணியர் ஆகிய திருக் கோயில்களில் தலமரமாக உள்ளது.







# குருந்து

**Family: Rutaceae, Indian Atalantia (*Atalantia monophylla*)**



திருப்பெருந்துறை ஆவுடையார் கோயில் ஆத்மநாத சுவாமி, திருத்தண்டலை (தண்டலைச்சேரி) நீள்நெறிநாதர், ஆகிய திருக்கோயில்களில் குருந்தமரம் தலமரமாக உள்ளது.

கொத்தான வெண்ணிற மலர்களையும் உருண்டை வடிவக் காய்களையும் உடைய முள்ளுள்ள எலுமிச்சை இன மரம்.

காட்டு எலுமிச்சை என்றும் காட்டு நாரங்கம் என்றும் குறிப்பிடப்பெறும். இதில் சிறுகுருந்து, பெருங்குருந்து எனும் வகைகள் தமிழகக் காடுகளில் காணப்படுகின்றன. வருடத்தில் இரண்டு முறை பூத்து காய்க்கும் தன்மை உடையது.





# கோரை

**Family: Cyperaceae, Coco Grass *(Cyperus rotundus)***

ஆப்பிரிக்காவை தாயகமாக கொண்ட இது ஒரு புல் வகையே கோரை. எனினும் தலமரமாகவே குறிக்கப்படுகிறது. தட்டையான நீண்ட இலைகள் வளர்ந்த பின் நுணியில் மூன்று பிரிவாகப் பூக்கள் இருக்கும்.

காய்ந்த புல் பாய் பின்ன பயன்படுத்துவார்கள். கோரைக் கிழங்கு மருத்துவ பயனுடையது. கசப்பும் துவர்ப்புமான சுவையுடைய இதன் கிழங்கு உடலுக்கு குளிர்ச்சி தரும். வீக்கங்களை குறைப்பதோடு நரம்பு தளர்ச்சிக்கு மருந்தாகின்றது.

திருச்சாய்க்காடு (சாய்காடு, சீர்காழி) சாயாவன ஈஸ்வரர் திருத்தலத்தில் தலமரமாக விளங்குவது கோரையாகும்.





# கோங்கிலவு (முள்ளிலவு)

**Family: Malvaceae, Red-silk Cotton (*Bombax ceiba*)**



வறட்சியான இலையுதிர்க் காடுகளிலும், தோட்டங்களிலும் வளரும் இயல்புடையது.

கைவடிவத் தனியிலை, இலையுதிர் காலத்தில் மரம் முழுவதும் செந்நிறப் பூக்கள் இருக்கும். இதன் இலை, பூ, விதை, பட்டை ஆகியவை மருத்துவப் பயனுடையவை.

திருநன்னிலத்துப் பெருங்கோயில், திருமங்கலக்குடி, திருக்கோடி, திருக்கைச்சினம் (திருவாரூர்) கைச்சினேஸ்வரர் முதலிய தலங்களில் கோங்கிலவு தலமரமாக உள்ளது.


விதை மூலம் பெருக்கம் செய்யப்படுகிறது.





# சரக் கொன்றை

**Family: Caesalpiniaceae, Indian Laburnam *(Cassia fistula)***



திருத்துறையூர், திருப்பந்தணை, திருப்பத்தூர் திருத்தளிநாதர், திருப்பந்தணைநல்லூர் பசுபதீஸ்வரர், அச்சிறுபாக்கம் (மதுராந்தகம்) பார்க்கபுரீஸ்வரர், திருக்கோவலூர், தீர்த்தனகிரி, திருச்சோழரம், திருவதிகை முதலிய பதினைந்துக்கும் மேற்பட்ட திருக்கோயில்களில் தலமரமாக கொன்றை விளங்குகிறது.

வன்னிக்கு அடுத்த படியாக அதிகமான திருக் கோயில்களில் தலமரமாக அமைந்துள்ளது. இதற்கு சித்திரைக் கனிப்பூ என்ற பெயரும் உண்டு.

ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் இலை முழுவதும் உதிர்ந்து மரம் முழுவதும் சரம் சரமாக மஞ்சள் நிற பூக்கள் தொங்கிய வண்ணம் அழகாக காட்சி தரும்.

விதை மூலம் பெருக்கம் செய்யப்படுகிறது. இந்த மரத்தைப் பாதுகாக்கும் முயற்ச்சியிலும், மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்திய தபால் நிறுவனம் 1981 ஆண்டு இதனை வைத்து தபால் வில்லை ஒன்றை வெளியிட்டுள்ளது. இம்மரம் விதை மூலம் இனப் பெருக்கம் செய்யப்படுகிறது..

# செண்பகம்

**Family: Magnoliaceae, Golden Champa (*Magnolia champaca*)**





இந்தியாவை தாயகமாகக் கொண்ட மரம். தமிழகத்தில் பசுமைமாறக் காடுகளிலும், அழகிய நறுமணப் பூக்களுக்காகத் தோட்டங்களிலும் வளர்க்கப்படும் தாவரங்களில் இதுவும் ஒன்று.

இரு வகை மரங்கள் பூக்கள் மஞ்சள், வெள்ளை நிறங்களில் இருக்கும். பூக்களில் இருந்து நறுமண எண்ணெய் தயாரிக்கப் படுகிறது. 20ம் தீர்த்தங்கரார் முனிசுவ்விரதநாத சுவாமி இந்த மரத்தின் கீழ் தவம் புரிந்து ஞானம் பெற்றார்.

திருத்தென்குடித் திட்டை வசிஷ்டேஸ்வரர், திருச்சிவபுரம் சிவபுரநாதர், திருநாகேசுவரம் நாகநாதர், திருப்பெண்ணாகடம் சுடர்க் கொழுந்துநாதர், திருஇன்னம்பர், திருஇராமனதீச்சரம் (நன்னிலம், திருவாரூர்), முதலிய திருத்தலங்களில் செண்பகம் தல விருட்சமாக உள்ளது.

விதை, ஒட்டு மற்றும் பதியன் மூலம் பெருக்கம் செய்யப்படுகிறது.

# சதுரக்கள்ளி

**Family: Euphorbiaceae, Antique spurge (*Euphorbia antiquorum*)**

தமிழகமெங்கும் வறண்ட பாறைகள் மிகுந்த சிறு குன்றுகள், தரிசு நிலங்களிலும் வளரும் தன்மை உடையது.

பொதுவாக இதனை வேலிக்காக தரிசு நிலங்களிலும், தோட்டங்களிலும் நட்டு வளர்க்கின்றனர்.

முப்பட்டையான தண்டு பகுதி முட்கள் உடையதாக இருக்கும். இதன் வேர், பால் மருத்துவப் பயனுடையவை.

திருப்புனவாயில் (ஆவுடையார்கோயில்) விருத்தபுரீஸ்வரர் திருத்தலத்தில் தலமரமாக விளங்கும் நான்கு மரங்களில் சதுரக் கள்ளியும் ஒன்றாகும்.







# சந்தனம்

**Family: Santalaceae, Indian Sandal wood (*Santalum album*)**




தென்னிந்தியக் காடுகளில் குறிப்பாக தமிழகம், கர்நாடகம், மகாராஷ்டிரா ஆகிய பகுதிகளில் அதிக அளவில் காணப்படக்கூடிய மரமாகும். மாற்றடுக்கில் அமைந்த இலைகளையுடைய மரம்.

இலைகளின் மேற் பகுதி கரும்பச்சை நிறமாயும் அடிப் பகுதி வெளிறியும் காணப்படும். நறுமண எண்ணெய் நிரம்பிய முதிர்ந்த கட்டைகள் அதிக விலை மதிப்புடையவை.

நறுமணத் தொழிற் சாலைகள் மற்றும் மருத்துவத் தேவைக்காகவும் சந்தன மரம் அதிக அளவில் பயன் படுத்தப்படுகிறது.

ஸ்ரீ வாஞ்சியம், (தஞ்சாவூர்) வாஞ்சிநாதேஸ்வரர், தேரழந்தூர், (மயிலாடுதுறை) வேதபுரீஸ்வரர் ஆகிய திருக்கோயில்களில் சந்தனமரம் தலமரமாக உள்ளது.

காடுகளைச் சார்ந்த இடங்களில் பழம் தின்னி பறவைகள், பாலுட்டிகள் இதன் பழத்தை உட்கொண்டு அதன் எச்சம் விழும் இடத்தில் விதை மூலம் நாற்றுக்கள் பரவும். 30 ஆண்டுகள் வளர்ந்தபின் தான் மரத்தின் முழுப் பலன் கிடைக்கும்.

# சிலந்தி மரம்

**Family: Ochnaceae, Micky Mouse Plant (*Ochna obtusata*)**



சிறு மர வகையை சார்ந்தது. 15அடி உயரம் வரை வளரும். இதன் இலைகள் மாற்றடுக்கில் அமைந்து, பளபளப்பாக இருக்கும்.

பூக்கள் மஞ்சள் நிறத்தில் சிலந்தி வடிவில் இருக்கும். விதைகள் சிவப்பு சிறத்தில் இருக்கும், முதிர்ந்த பின் கருப்பு நிறமாக மாறும்.

இவை பார்ப்பதற்க்கு கார்டூன் பொம்மை போல் தோற்றமளிக்கும்.


விதை மூலம் பெருக்கம் செய்யப்படுகிறது. திருப்பயற்றூர் (நன்னிலம், திருவாரூர்) திருப்பயற்றுநாதர் தலத்தின் தலமரமாக விளங்குவது சிலந்தி மரமாகும்.





# சிறுபூளை

**Family: Amaranthaceae, Mountain Knot Grass *(Aerva lanata)***



தமிழகம் எங்கும் தரிசாகக் கிடக்கும் நிலங்களில் சிறுசெடியாக (சுமார் 50 செ.மீ. உயரம்) கிளைபரப்பி வளர்ந்து நிற்கும். சிறு நீள்வட்ட இலைகளையும், இலைக் காம்புகளில் வெண்மையான பூக்கதிர்களையும் உடையது. நேராக வளரும்.

பொங்கல் பூ, சிறுபீளை என்றும் வழங்கப்படுகிறது. பொங்கல் பண்டிகையின் போது ஆவாரம் பூவுடன் சிறுபூளை பூவையும் இல்லந்தோறும் பயன்படுத்துவது மரபாக உள்ளது. செடிமுழுவதும் மருத்துவப் பயனுடையது.

பொங்கலுக்கு முந்திய நாள் வேப்பங்கொத் தோடு இதனையும் சேர்த்து வீட்டின் முகப்பில் காப்பு கட்டும் பழக்கம் கோவை, ஈரோடு, சேலம் போன்ற ஊர்களில் இன்றும் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. கோயம்புத்தூரில் உள்ள பூளைமேடு பகுதியில் இந்த செடி அதிகம் காணப்பட்டதால் இவ்வூர் இப்பெயர் பெற்றது.

செடியினை முழுமையாக வேருடன் தண்ணீரில் போட்டுக் கொதிக்க வைத்துச் சுண்டியநீரை பருகினால் சிறுநீர் பையில் கல் உண்டாதல் குறையும். அதனால் இதற்குக் கல்லுருக்கி என்ற பெயர் வந்தது. திரு இரும்பூளை (ஆலங்குடி, திருவாரூர்) ஆபத்சகாயேசுவரர் என்னும் திருத்தலத்தில் தலமரமாக விளங்குவது சிறுபூளை ஆகும்.

# தருப்பை

**Family: Poaceae, Cogon Grass (*Imperata cylindrica*)**

தமிழகம் எங்கும் பரவலாக காணப்படும் புல்வகை ஆகும். இது நீர் வளமிக்க இடங்களான வாய்க்கால் வரப்புகள், ஆற்றங்கரை ஓரங்களில் அடர்ந்து உயர்ந்து வளரும் இயல்புடையது.

பூஜை முதலிய காரியங்களுக்குப் பயன்படுத்துவதால் அர்ச்சனைப் புல் என்றும் குறிக்கப்படுகிறது.

செடி முழுமையும் மருத்துவக் குணமுடையது. இதன் வேர் உடலுக்கு குளிர்ச்சி தரும். திருநள்ளாறு (காரைக்கால்) திருநள்ளாற்று ஈசர் தலத்தின் தலமரமாக விளங்குவது தருப்பைப்புல் ஆகும்.





# தாழை

**Family: Pandanaceae, Screw Pine (*Pandanus odoratissimus*)**



நெய்தல் திணையில் கடற்கரைச் சூழலில் காணப்பட்டதாகச் சங்க நூல்களில் கூறப்பட்ட செடிகளில் தாழையும் ஒன்றாகும்.

தாழையின் இலை ஓலைபோல எழுதப் பயன் படுத்திய செய்தியைச் சிலப்பதிகாரம் (2, 17) கூறுகின்றது. குறிஞ்சிப் பாட்டில் உள்ள 99 மலர்களில் தாழையும் ஒன்றாகும்.

ஆண், பெண் என தனித்தனிச் செடியாக வளரும். திருமகேந்திரப்பள்ளி, (கொள்ளிடம்) திருமேனியழகர் திருச் சோற்றுத் துறை, முதலிய திருக்கோயில்கள் தலமரமாக விளங்குவது தாழையாகும்.

பழம் மருத்துவ குணம் நிறைந்தது. பூவிலிருந்து நறுமணத் திரவியம் தயாரிக்கின்றனர். வேர் கிழங்கு மூலம் பெருக்கம் செய்யப்படுகிறது. தாழை அசுத்த நீரை சுத்திகரிக்கும் திறன் படைத்தது.

# தில்லை

**Family: Euphorbiaceae, Milky Mangrove (*Excoecaria agallocha*)**

அம்பல விருட்சம், அம்பலத்தி என்ற பெயர்களும் உண்டு. திருத்தில்லை (சிதம்பரம்) நடராசர் கோவில், தலமரமாக விளங்குவது தில்லை மரமாகும்.

தில்லை மரங்கள் நிறைந்ததாலேயே தில்லைவனம் என்ற பெயர் பெற்று தில்லையானது. (ஊரின் பெயர் தில்லை; கோயிலின் பெயர் சிதம்பரம். தற்போது கோயிலின் பெயராலேயே ஊர் பெயர் விளங்குகின்றது.)

இது கூர்நுனி உள்ள இலைகளை உடைய பசுமையான மரம். இம்மரத்தின் பால் உடலில் பட்டால் உடல் புண்ணாகும்.

தமிழகக் கடற்கரை ஓரச் சதுப்பு நிலக் காடுகளில் (Mangrove forest) தானே வளர்கின்றது. இலை, விதை, பால் முதலியன மருத்துவக் குணங்களைக் கொண்டுள்ளது. விதை மற்றும் பதியன் மூலம் பெருக்கம் செய்யப்படுகிறது.



# துளசி

**Family: Lamiaceae, Holy Basil (*Ocimum sanctum*)**





திருவிற்குடி நாகப் பட்டிணம் வீரட்டானேஸ்வரர் திருத்தலத்தில் தலமரமாக விளங்குவது துளசி செடியாகும்.

இது கோயிற் பூஜைகளில் குறிப்பாக பெருமாள் கோயில்களில் பயன்படுத்தப்படுவதால் கோயில் பூந்தோட்டங்களில் வழக்கமாகக் காணப்படுகிறது.

வீடுகளில் துளசியை வளர்த்து பூசிக்கும் வழக்கமும் உண்டு. சில இலைகளைக் காலையில் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் நாள் முழுவதும் சோர்வு இன்றிச் செயல்படலாம்.

இலை, தண்டு, பூ, வேர் அனைத்துப் பகுதிகளும் மருத்துவ குணம் வாய்ந்தவை. துளசி மாலை மிகவும் புனிதமாக கருதப்படுகிறது.

துளசியில் நிறைய வகைச் செடிகள் உண்டு. விதை மற்றும் இளம் தண்டுக் குச்சிகள் மூலம் பயிர் பெருக்கம் செய்யப்படுகிறது.

# தென்னை

**Family: Arecaceae, Coconut Tree *(Cocos nucifera)***



இந்துமத சமயச் சடங்குகளில் தேங்காய் மிகவும் முக்கியமான ஒன்றாகும். தென்னையை தென்னம் பிள்ளை என்றுதான் அழைப்பார்கள்.

திருத் தெங்கூர் (திருவாரூர்) ரஜதகிரீஸ்வரர், ஆடுதுறை தயாநிதீஸ்வரர், வடகுரங்காடுதுறை முதலிய தலங்களில் தென்னை தலமரமாக விளங்குகின்றது.

தேங்காய் தண்ணீர் குடித்து வந்தால் உடலில் கொழுப்புக்கள் சேராது. மேலும் இதனைக் குடிப்பதால் பசிகட்டுப்படும், உடல் எடை அதிகரிப்பைத் தடுக்கலாம். இளநீர் கால்சியம், பொட்டாசியம், குளுக்கோஸ் நிரம்பியது. தென்னை மரத்தின் அனைத்து பகுதியும் பயனுடையவை.

தமிழகத்துக் கோவில்களில் வேறு எங்கும் காணப்படாத தனிச்சிறப்பு, நாகராஜா சுவாமி (நாகர்கோவில்) ஆலயத்தின் மூலஸ்தானத்தின் மேல்கூரைத் தென்னை ஓலையால் வேயப்பட்டதாகும். எல்லாப் பருவகாலத்திலும் தேங்காயும், வாழைப்பழமும் கிடைக்கும். இவை இரண்டும் இறைவழிபாட்டில் முக்கியமான பொருள்களாகும். தேங்காய்க்கு குரும்பை, இளநீர், தேங்காய், கொப்பரை என நால்வகைப் பருவங்கள் உள்ளன. சென்னையில் தென்னை மரங்கள் நிரம்பிய பகுதி தென்னம்பேட்டை என பெயர் வைத்தார்கள் பிற்பாடு அது தேனாம்பேட்டையாக மாறிப்போனது.

# தேற்றா

**Family: Loganiaceae, Clearing Nut Tree (*Strychnos potatorum*)**



தமிழகத்தில் இலையுதிர் காடுகளில் பொதுவாக காணப்படும். சுமார் 30 அடி உயரம் வளரும் இயல்புடைய மரம்.

இதன் இலை, வேர், கொட்டை ஆகியன மருத்துவப் பயனுடையவை. இதன் விதையைத் தூளாக்கி சீதக்கழிச்சலை நிறுத்த நீருடன் கலந்து குடிக்கலாம்.

திருக்குவளை என்னும் திருக்கோளிலி பிரம்மபுரீஸ்வரர் (நாகப்பட்டிணம்) தலத்தின் தலமரமாக விளங்குவது தேற்றா மரமாகும். இதற்கு சில்லம், கதலிகம், தேத்தாங்கொட்டை என்ற பெயர்களும் உண்டு.

மழைக்காலங்களில் நதிகளில் வெள்ளப் பெருக்கு உண்டாகும் போதும், சாதாரணமாகவே குளம், ஊருணிகளில் இருந்து பெறப்படும் நீரும், சிலசமயம் கலங்களாக இருக்கும். அந்த சமயத்தில் தேத்தா மரத்தின் கொட்டையானது (Clearing nut) கலங்கிய நீரை தெளியவைக்க பயன்படுத்தப்படுகிறது.

# நந்தியாவட்டம்

**Family: Apocyanaceae, Crape Jasmine (*Ervatamia coronaria*)**

தமிழகம் எங்கும் பரவலாக பூந்தோட்டங்களிலும், கோயில் நந்தவனங்களிலும் வளர்க்கப்படும் செடியாகும். எதிரடுக்கில் அமைந்துள்ள இலைகள் கரும்பச்சை நிறமாக இருக்கும்.

16ம் தீர்த்தங்கரர் சாந்திநாத சுவாமி இந்த மரத்தின் கீழ் தவம் புரிந்து ஞானம் பெற்றார். திருவெண்ணியூர் வெண்ணிக் கரும்பேஸ்வரர் திருக்கோயிலில் தலமரமாக விளங்குவது நந்தியா வட்டமாகும்.

இதன் வேர், பூ, பால் ஆகியன மருத்துவப் பயனுடயவை. இதில் ஒற்றைப் பூ இரட்டை அடுக்குப் பூ என்கின்ற இரண்டு இனமுண்டு. இரண்டும் ஒரே குணமுடையவை.

பூ கண் வைத்தியத் திற்கும், பால் புண்களின் வீக்கத்தைக் குறைக்கவும் பயன்படுவதோடு புண்களை ஆற்றவும் உதவுகிறது.

இச் செடி விதை மற்றும் பதியன் மூலம் பெருக்கம் செய்யப்படுகிறது.





# நாரத்தை

**Family: Rutaceae, Citron (*Citrus medica*)**



திருப் பேரையில் (ஓகைப் பேரையூர்) ஜெகதீசுவரர் திருத் தலத்தின் தல மரமாக விளங்குவது நாரத்தை மரமாகும். இதன் பழத்தை நார்த்தம்பழம், கிச்சலிப்பழம். என்றும் கூறுவார்கள். சிறிய மரவகை 3 மீ. உயரம் வரை வளரும்.

அனைத்து காலங்களிலும் பழங்கள் கிடைக்கும். இதன் இலை, காய், பழம் அனைத்தும் மருத்துவப் பயன் உடையவை. பழம் விட்டமின் சி சத்து நிறைந்தது. ஊறுகாய் செய்து பயன்படுத்துவார்கள்.

நன்கு பழுத்தப் பழம் மஞ்சள், பச்சை கலந்து காணப்படும். பழத்தின் தோல்பகுதி கனமானதாக இருக்கும். இவற்றில் நீர் நிரம்பியிருக்கும். புளிப்பு சுவை மிகுதியாக இருக்கும.

கிராமபுரத்தில் சாத்துகுடியாக நார்த்தம்பழமே விளங்குகிறது. இதனை உணவில் சேர்த்து வர ரத்தம் சுத்தமடையும், வயிற்றுப் புழு நீங்கும். இம்மரம் விதை மூலம் பெருக்கம் செய்யப்படுகிறது.

# நாகலிங்கம்

**Family: Lecythidaceae, Cannonball Tree *(Couroupita guianensis)***

நாகலிங்க மரத்தின் பூவானது சிவாலயத்தை நினைவு படுத்தும் வகையில் அமைந்திருக்கும்.

மற்ற தாவரங்களைப் போல் பருவகால மாற்றங்கள் கிடையாது, எப்பொழுதும் பசுமையாக இருக்கும்.

இம்மரத்தில் பூக்கள் வேர் பகுதிக்கு மேலேயும், கிளையின் கீழ் பகுதியிலும், சிறு கிளைகள் பரப்பி அதில் பூக்கும்.

இதன் காய் பந்து போல் இருப்பதால் இதை Cannonball Tree என்று அழைப்பார்கள்.

ஸ்ரீபடலாத்தி (சென்னை – புலியூர்) பரத்வாஜேஸ்வரர், புதுப்பாளையம் (கடலூர்) இரட்டைபிள்ளையார், கீழவாசல் (தஞ்சாவூர்) வல்லப அம்பிகா சமேத சுவேத விநாயகர், மற்றும் திருவேள்விக்குடி (குத்தாலம், நாகப்பட்டிணம்) மணவாளேஸ்வரர் ஆகிய தலங்களில் நாகலிங்கம் தலமரமாக விளங்குகின்றது.



# நாவல்

## Family: Myrtaceae, Jamun (*Syzygium cumini*)



நாவல் ஒரு பெரிய மர வகையைச் சேர்ந்தது. இந்தியாவில் எல்லாப் பகுதிகளிலும் வளரும். குறிப்பாக ஆற்றுப் படுகைகளில் மற்றும் கடற்கரை ஓரங்களில் நன்கு வளரும்.

திருவானைக்காவல் (திருச்சி) ஜம்புநாதர், திருநாவலூர் (உளுந்தூர்பேட்டை) பக்தஜனேஸ்வரர் ஆகிய திருக்கோயில்களில் தலமரமாக விளங்குவது நாவல் மரமாகும்.

9ம் தீர்த்தங்கரர் புஸ்பதந்த (சுவிதிநாத) சுவாமி, 13ம் தீர்த்தங்கரர் விமலநாத சுவாமி ஆகியோர் இந்த மரத்தின் கீழ் தவம் புரிந்து ஞானம் பெற்றனர். பழங்காலத்தில் மக்கள் மரத்தின் அடியிலேயே தெய்வங்களை வைத்து வணங்கினர் எனும் கருத்துக்கு அரண் செய்வதாக திருவானைக்காவல் கோவில் கருவறைக்கு அருகில் மிகவும் பழமையான வெண்நாவல் மரம் (Syzygium malaccense) அமைந்திருப்பதை இன்றும் நாம் காணலாம். மே மாதம் முதல் பூக்க துவங்கும் அதிலிருந்து 60–70 நாட்கள் கழித்து கனி வரத்தொடங்கும். கனியின் நிறம் கரு நீலம்.

மிகுந்த சாற்றுடன் இருக்கும். உண்ணக்கூடிய பழம். சிறிது துவர்ப்பாக இருக்கும். 100 கிராம் பழங்களில் உள்ள உணவுச் சத்துக்களின் விவரம், மாவுச் சத்து 19.7 கி., புரதச்சத்து 0.7 கி., கொழுப்பு 0.1 கி., கால்ஷியம் 20 மி.கி., பாஸ்பரஸ் 10 மி.கி., இரும்பு 1மி.கி., ஆகியவை.

கொட்டையை பொடி செய்து சாப்பிட்டு வந்தால் உடலில் சர்க்கரை அளவை கட்டுப்படுத்தும். மரப்பட்டையை அரைத்து அடிபட்ட காயம், வீக்கம் முதலியவற்றின் மேல் போட, அவை குறையும். இது விதை மூலம் இனவிருத்தி செய்யப்படுகிறது.

# நுணா

**Family: Rubiaceae, Indian Mulberry (*Morinda tinctoria*)**


எல்லா வித நிலங்களிலும் வளரக்கூடிய சிறுமரம். தமிழகமெங்கும் பரவலாக இம்மரத்தை பார்க்கலாம்.

மா இலை போன்று, எதிரடுக்கில் அமைந்த இலை, நாற் கோண சிறு கிளைகளையும் சிறிய வெண்ணிற மலர்களையும் முடிச்சு முடிச்சாகக் காய்களையும் உடைய மரம்.

சுமார் 15 அடி உயரம் வரை வளரும். மரத்தின் உட்புறம் மஞ்சள் வண்ணமாயிருக்கும். அதனால் மஞ்சணத்தி என்றழைக்கப் படுகிறது. பட்டைகள் தடிப்பாக இருக்கும். கொம்படிக்கோட்டை (தூத்துக்குடி) ஸ்ரீவாலகுருசாமி தலத்தின் தலமரமாகும்.

லேசான மரம் என்பதால் ஏர், வில்வண்டி, பாரவண்டி களில் மாடுகளைப் பூட்டும் நிலத்தடி செய்யப் பயன்படும். மாடுகளின் கழுத்து பாரத்தை குறைக்கும். இது விதை மூலம் பெருக்கம் செய்யப்படுகிறது.







# நெல்லி

**Family: Phyllanthaceae, Gooseberry (*Phyllanthus emblica*)**






நெல்லி மரம் வறட்சியான சூழ்நிலையில் வளரக் கூடிய பலவிறகு கூட்டிலை இலையுதிர் இயல்புடையது.

நெல்லி மரத்தைத் தோட்டத்திலும், வீட்டு முற்றத்திலும் வளர்த்து வந்ததை புறநானூறு ''நெல்லி வேலிப் பரலுடை முன்றிலங் குடிச் சீறூர்''என கூறுகின்றது. தமிழகத்தில் நெல்லிமரம் இரு முறை பூக்கின்றன. பிப்ரவரியிலும், ஜூலையிலும் பூக்கும்.

பிப்ரவரியில் அதிக அளவு காய்கள் உருவாவதில்லை. ஜூலையில் பூக்கும் சமயம் நிறைய காய்கள் கிடைக்கின்றன. நெல்லிக் கனியை தினமும் உண்பதால் வைட்டமின் சி, இரத்த விருத்தி, நீரிழிவைக் கட்டுப்பாட்டில் வைத்தல் போன்ற பலன் கிடைக்கும். தழை, கால்நடைகளுக்குத் தீவனமாகவும், வயல்களுக்கு எருவாகவும் பயன் படுத்துகின்றனர்.

திருநெல்லிகாநெல்லிவனநாதர், திருநெல்வாயில், திருப்பழையாறை ஸ்ரீ சோமநாதர், திருவாவினங்குடி (பழநி அருகில்) குழந்தைவேலாயுதர், பாலக்கரை (மயிலாடுதுறை) காசிவிஸ்வநாதர், வடதளி முதலிய திருத்தலங்களில் நெல்லி தலமரமாக விளங்குகின்றது. விதை மூலம் பெருக்கம் செய்யப்படுகிறது.

# பராய்

**Family: Moraceae, Toothbrush Tree (*Streblus asper*)**

பிராய், குட்டி பலா, குறும் பலா என்றும் குறிப் பிடப்படுகிறது.


கரும்பச்சை நிறமான இதன் இலை உப்புதாள் காகிதம் போல் சுரசுரப்பாக இருக்கும்.

இம்மரத்தின் இலை, பால், பட்டை மருத்துவ குணமுடையவை.

திருப்பராய்த்துறை (அகண்ட காவிரி, திருச்சி) பராய்துறைநாதர் திருக்கோயிலின் தலமரமாக விளங்குவது பராய் மரமாகும்.

பராய் மரத்தினை சமஸ்கிருதத்தில் 'தாருகாவிருக்ஷம் என்பர். இத்தலத் திற்கு தாருகாவனம் என்ற பெயரும் உண்டு.





# பலா

**Family: Moraceae, Jack Fruit (*Artocarpus heterophyllus*)**





பலா மர வகையை சேர்ந்தது ஆகும். சுமார் 15 முதல் 20மீட்டர் உயரம் வரை வளரும். அகலமான இலைகள் எதிர் அடுக்கில் அமைந்து இருக்கும்.

அடி மரக் கிளைகளில் பச்சை நிற பூக்கள் வரும், பின் இது மஞ்சளாக மாறும். விதை மூலம் பெருக்கம் செய்யப்படுகிறது. மரம் இசைக் கருவிகள், மரசாமான்கள், விளையாட்டு பொருள் செய்யப் பயன்படுகிறது.

திருவாலங்காடு (திருத்தணி) ஆலங்காட்டு அப்பர், திருமங்கலம் (மதுரை) சாமவேதீஸ்வரர், திருவாரூர் கற்பகநாதர், திருக்குற்றாலம், திருநாலூர், திருவாய்மூர் முதலிய பத்துக்கும் மேற்பட்ட சிவத் திருகோயில்களில் தலமரமாக விளங்குகிறது.



# பவழமல்லி

**Family: Oleaceae, Coral Jasmine (*Nyctanthes arbor-tristis*)**

தமிழகமெங்கும் பரவலாக காணப்படும் சிறுமரம். இதன் மலர் வழிபாட்டிற்கான மலர் என்பதால் அதிகளவில் தோட்டங்களிலும், நந்தவனங்களிலும் வளர்க்கப்படுகிறது. இதை பாரிஜாதம் எனவும் அழைப்பார்கள்.

நீள் வட்டமான இலை எதிரடுக்கில் அமைந்து இருக்கும். பூக்கள் இரவு நேரங்களில் பூத்து விடியற் காலை உதிர்ந்து விடும். விதை மூலம் பெருக்கம் செய்யப்படுகிறது.

திருக்களார் (களர், திருவாரூர்) களர்முளைநாதர், சீர்காழி பிரம்மபுரீஸ்வரர், திருக்காழி, (மயிலாடுதுறை சிதம்பரம் இடையே உள்ள சீர்காழி) திருப்பிரமபுரம் திருக்கோயில்களின் தலமரமாகும்.








# பன்னீர் மரம்

**Family: Rubiaceae, Indian Lavender (*Guettarda speciosa*)**



முருகன் திருக் கோயில்களில் பன்னீர் இலை அர்ச்சனை செய்யவும், சுவாமிக்கு மாலை கட்டவும், விபூதி பிரசாதம் தருவதற்க்கும் அதிக அளவில் பயன் படுத்தப்படுகிறது.

இலை வட்ட வடிவத்தில் இருக்கும். இதன் பூக்கள் இரவில் தான் பூக்கும்.

திருபேரூர் (கோவை) பட்டீஸ்வரர், திருச் சோற்றுத்துறை சோற்றுத் துறைநாதர், கீழைத் திருக்காட்டுப்பள்ளி (நாகை) ஆரணியசுந்தர் முதலிய திருக் கோயில்களில் பன்னீர் தலமரமாக விளங்குகின்றது.





# பனை

**Family: Arecaceae, Asian Palmyra Palm (*Borassus flabellifer*)**



திருப்பனந்தாள், திருப்பனங்காடு, திருப் பனையூர் சௌந்தர நாதர், திருமழபாடி, செய்யாறு (திருவோத்தூர்) வேதபுரீஸ்வரர், திருவண்ணாமலை மாவட்டம் பனங்காட்டீசுவரர் முதலிய சிவத் தலங்களில் பனை மரம் தலமரமாக உள்ளது.

தமிழகத்தின் மாநில மரமாக பனைமரம் விளங்குகிறது. கார்த்திகை தீபத்தன்று பனை ஓலையில் கொழுக்கட்டை செய்து இறைவனுக்குப் படைப்பது தமிழகத்தில் உள்ள தென்மாவட்டங்களில் குறிப்பாக நெல்லை, தூத்துக்குடி பகுதியை சேர்ந்தவர்கள் இதை வழக்கமாக கொண்டுள்ளனர்.

இதன் பழம் நொங்கு உஷ்ணத்தைத் தணிக்க வல்லது, கோடைகாலத்தில் அதிக அளவில் சாலை ஓரங்களில் விற்கப்படும். பதனி, பனை வெல்லம், பனங்கல்கண்டு, பனங்கிழங்கு அனைத்தும் நமக்கு உணவுப்பொருளாக பயன்படுத்தப் படுகின்றன. பனைஓலைகள் விசிறி மற்றும் கைவினைப் பொருள்கள் செய்யப் பயன்படுகிறது. முற்றிய மரம் கூரை மற்றும் ஓட்டு வீடு கட்டுவதற்க்கும் பயன் படுகிறது. தற்பொழுது பனை மரங்களும் எண்ணிக்கையில் குறைந்து அதைச் சார்ந்த தொழில்களும் நலிவடையும் நிலையில் உள்ளது.

# பாதிரி

**Family: Bignoniaceae, Fragrant Padri Tree (*Stereospermum suaveblens*)**





செம்பூம் பாதிரி என்ற பெயரும் உண்டு. தமிழகம் எங்கும் மலைச்சார்ந்த காடுகளில் காணப்படும் இலையுதிர் மரமாகும்.

7 முதல் 9 வரையான இணையான இலைகள் எதிரமைப்பில் அமைந்து இருக்கும். மரப்பட்டை சாம்பல் நிறமாக காணப்படும்.

திருப்பாதிரிப்புலியூர் பாடலேஸ்வரர், சென்னை–பாடி (திருவலிதாயம்) வலிதாய நாதர், திருவாரூர் தியாகேசர், அவினாசி ஆகிய தலங்களில் பாதிரி தலமரமாக விளங்குகின்றது.

இம் மரம் விதை மூலம் பெருக்கம் செய்யப்படுகிறது

# பாலை

**Family: Apocynaceae, Pala-indigo Tree (*Wrightia tinctoria*)**

தமிழகமெங்கும் இலையுதிர் காடுகளிலும், சாலை ஓரங்களிலும் பரவலாகக் காணப்படும் மரமாகும். சுமார் 10 மீ. உயரம் வரை வளரும் நடுத்தர மரம். வெட்டுப்பட்டால் பால் வடியும். இலைகள் எதிர்எதிராக தனித்து நீள்வட்டமாக ஈட்டி முனையை ஒத்திருக்கும்.



திருப்பாலைத்துறை பராய்த்துறைநாதர் என்னும் திருத்தலத்தின் தலமரமாக விளங்குவது பாலை மரமாகும். தலத்தின் பெயர் தலமரத்தின் பெயரால் அமைந்ததேயாகும். இது வெட்பாலை, நிலப்பாலை என்றும் குறிப்பிடப்படுகிறது. இலை கசப்புத் தன்மை உடையது பல்வலியை குணப்படுத்தப் பயன்படுகிறது. விதை மூலம் பெருக்கம் செய்யப்படுகிறது.





இம்மரம் வெப்பப் பகுதியில் வளரும். யானைக்கு தாகம் ஏற்பட்டால் பாலை மரப்பட்டையை கிழித்து நீர் பருகும். பட்டை உரிக்கப்பட்ட பாலை 'தந்தம்' போல் வெண்மையாக இருக்கும்.

# பிரம்பு

**Family: Arecaceae, Cane (*Calamus rotang*)**







திருக் கோடிக்கா கோடிக்காயீசுவரர் என்னும் திருத்தலத்தின் தலமரமாக விளங்கும் இது கொடி வகையாகும்.

சதுப்பு நிலக் காடுகளிலும், ஆற்றங்கரை ஓரங்களிலும், மழைக்காடுகளிலும் அதிக அளவில் பிரம்புக் கொடிகளை காணலாம்.

தண்டுப் பகுதி முழுவதும் முள் நிறைந்து இருக்கும். நன்கு முற்றிய தண்டு முள் நீக்கப்பட்டு கூடைகள், நாற்காலிகள், கைவினைப் பொருள்கள் செய்யப் பயன்படுகிறது.

இதன் கிழங்கு மருத்துவக் குணமுடையது. விதை மற்றும் வேர் கிழங்கு மூலம் பெருக்கம் செய்யப்படுகிறது.

பிரம்பு கொடி வளரும் இடங்களில் உள்ள அசுத்த நீரை சுத்திகரிக்கும் திறன் படைத்தது.

# புங்கன்

**Family: Fabaceae, Indain Beech Tree *(Pongamia glabra)***



பெரும்பாலும் சாலை ஓரங்களில் நிழலுக்காக நட்டு வளர்க்கப்படும் மரமாகும். ஒரு இணரில் 5 முதல் 7 வரை எதிரமைப்பில் அமைந்த இலைகள் உடையது.

இதன் பூக்கள் இளஞ்சிவப்பும் வெண்மையும் கலந்த நெற்பொறி போன்று கொத்துக் கொத்தாக இருக்கும். விதையிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய் மருத்துவப் பயனுடையவை.

நீரிழிவு நோயினருக்கு அதிக தாகம் ஏற்படும். இதற்கு புங்கம் பூவை கசாயமிட்டு அருந்தி வரலாம்.

தற்பொழுது புங்கன் எண்ணெயிலிருந்து பயோடீசல் தயார் செய்து வாகனம் மற்றும் ஆயில் இஞ்ஜின்களுக்கு உபயோகப்படுத்தி வருகிறார்கள்.

இந்த எண்ணையை பிரிக்கும் போது கிளிசரின் மற்றும் மெத்தனால் கிடைக்கும். எண்ணை சோப்பு செய்யப் பயன்படுத்தப் படுகிறது. திருப்புன்கூர் (புன்கூர், நாகப்பட்டிணம்) சிவலோகநாதர் திருக்கோயிலின் தலமரமாக விளங்குவது புங்கமரமாகும். விதை மூலம் பெருக்கம் செய்யப்படுகிறது.

# புன்னாகம்

**Family: Euphorbiaceae (*Macaranga peltata*)**



இம் மரத்தை வட்டகனி என்றும் அழைப்பார்கள். இலைகள் தனித்தவை, மாற்று அடுக்கமானவை, சுழல் போல் அமைந்தது வட்ட வடிவில் இருக்கும்.

மரம் 15 மீ. உயரம் வரை வளரும். இந்தியாவில் மேற்கு தொடர்ச்சி மலைகளில் தெற்கு மற்றும் மத்திய சயாத்திரி காடுகளில் காணப்படுகின்றன.

திருநாரையூர் (கும்பகோணம்) சௌந்தரநாதர் தலத்தின் தலமரமாக புன்னாகம் உள்ளது.




# புரசு

**Family: Fabaceae, Flame of the Forest *(Butea monosperma)***

காட்டின் தீச்சுவலை என்று கூறப்படும் இம் மரமானது ஏப்ரல், மே மாதங்களில் மரம் முழுவதும் சிகப்பு நிறப் பூக்களுடன் பார்ப்பதற்க்கு தீச்சுவலை போல் தோற்றம் அளிக்கும். இலையுதிர் மரமாகும்.

பழங்காலத்தில் இதன் இலையானது கோயில்களில் பிரசாதம் வழங்க தொன்னையாகப் பயன்படுத்தப்பட்டது, இப்போது எல்லாம் பாலிதீன் மயமாகிவிட்டது, தொன்னைக்கான தேவையும் குறைந்து விட்டது.

திருநாலூர்மயானம் (குடவாயில், திருவாரூர்) பலாசவனநாதர், திருத்தலைச் சங்காடு (ஆக்கூர், நாகப்பட்டிணம்) சங்கரணயேஸ்வரர், இளந்தோப்பு, (மயிலாடுதுறை) குந்தனேசுவரர், திருக்கஞ்சனூர் ஆகிய தலங்களில் புரசு (பலாசம்) தலமரமாக உள்ளது.





இது பலாசம் என்றும் குறிப்பிடப்படுகிறது. விதை மூலம் பெருக்கம் செய்யப்படுகிறது. இதன் இலையானது தையல் இலை, தொன்னை செய்யப்பயன்படுகிறது. சென்னையில் உள்ள புரசைவாக்கம் பகுதியில் புரசை மரங்கள் மிகுதியாக இருந்ததால், அப்பகுதி புரசைவாக்கம் ஆனது.

# புளி

**Family: Fabaceae, Tamarind (*Tamarindus indica*)**





பொதுவாகச் சாலை ஓரங்களில் நிழல் தரும் மரமாக வளர்க்கப்படும் மரங்களில் புளியமரமும் ஒன்று.

மற்றொரு காரணம் ஒவ்வொரு வருடமும் அதன்பழம் அறுவடை செய்யபட்டு சிறிதளவு வருமானம் தரக்கூடியது.

பொதுவாகத் தென் இந்தியாவில் புளியம்பழம் சமையலில் பயன்படுத்தப்படும் முக்கியப் பொருளில் ஒன்றாகும்.

புளியமரத்தின் இலை, பூ, பிஞ்சு, பழம், விதை, மரம் அனைத்தும் பயனளிக்கின்றன. மிகவும் உறுதியான இம்மரம், சக்கரம், கரும்பலகை, உரல், செக்கு செய்ய பயன்பட்டது.

திருஈங்கோய்மலை முசிறி (திருச்சி) மரகதாசலேசுலரா் தலமரமாக உள்ளது. பேரூர் (கோயம்புத்தூர்) பட்டீஸ்வரர் ஆலயத்தில் வழிபாட்டு மரமாகவும் உள்ளது. விதை மூலம் பெருக்கம் செய்யப்படுகிறது.

# புன்னை

**Family: Calophyllaceae, Alexandrian Laurel (*Calophyllum inophyllum*)**

தமிழகத்தில் கிழக்கு கடற்கரை மாவட்டங்களில் வளரும் நடுத்தர உயரம் உடைய மரம். தோட்டங்களிலும், வீடுகளிலும் அழகுக்காக வளர்க்கப் படுகின்றது.

எதிரடுக்கான இலைகள் முரமுரப்பாக அகன்றதாக பல நரம்புகளுடன் மினுமினுப்பாக இருக்கும். விதை மூலம் பெருக்கம் செய்யப்படுகிறது. காய்ந்த விதையை பற்றவைத்தால் வரும் புகையானது கொசுவை விரட்டும் தன்மை உடையது.

திருப்புனவாயில் (ஆவுடையார்கோயில், புதுக்கோட்டை) பழம்பதிநாதர், திருப்புகலூர் அக்னிபுரீஸ்வரர், திருமயிலாப்பூர் கபாலீஸ்வரர், திருவெண்ணெய் நல்லூர் (உளுந்தூர்ப்பேட்டை) சொர்ணகடேஸ்வரர், திருவேட்டக்குடி சுந்தரேஸ்வரர் ஆகிய தலங்களில் புன்னை தலமரமாக விளங்குகிறது.



# பெரியாநங்கை

**Family: Polygalaceae, Common Indian Milk Wort (*Polygala chinensis*)**



இது ஒரு குறுங்செடி வகையைச் சார்ந்த தாவரமாகும். எதிரடுக்கில் அமைந்த இலைகள் கசப்பு தன்மை உடையது,

இலையானது பாம்புக்கடி, நண்டுவாக்கிளி விஷக்கடிக்கு மருந்தாகப் பயன்படுகிறது.

சிறியா நங்கை என ஒரு செடியும் உள்ளது. இவை இரண்டும் கிட்டதட்ட ஒரே குணமுடையவை.

திருந்துதேவன்குடி (வேப்பத்தூர், கும்பகோணம்) கற்கடேசுவரர் தலத்தின் தலமரமாக விளங்குகிறது.

விதை மூலம் பெருக்கம் செய்யப்படுகிறது.



# மகிழம்

**Family: Sapotaceae, Bullet Wood Tree (*Mimusops elengi*)**

இலையுதிர்க்காது என்றும் பசுமையுடைய தோற்றம் தரும் இந்த மகிழமரம். இயற்கையான பசுமை மாறாக் காடுகளில் காணப் படுவதோடு, பூங்காக்களிலும் சாலை ஓரங்களிலும் அதிகமாக வளர்க்கப் படுகிறது.





மகிழத்திற்கு வகுளம் என்ற பெயரும் உண்டு. சாலை ஓரங்களிலும் நிழலுக்காக வளர்க்கப்படுகிறது.

21ம் தீர்த்தங்கரர் நமிநாத சுவாமி இந்த மரத்தின் கீழ் தவம் புரிந்து ஞானம் பெற்றார். திருவொற்றியூர், திருவண்ணாமலை, திருஇராமனதீச்சரம், திருநீடூர் சிவத் தலங்களில் மகிழமரம் தலமரமாக உள்ளது.

திருவண்ணாமலை, திருக்கண்ண மங்கை போன்ற திருத்தலங்களில் மகிழம்பூ இறைவழிபாட்டிற்கு பயன்படுத்தப்படுகிறது. மகிழமரம் விதை மூலம் பெருக்கம் செய்யப்படுகிறது.

# மல்லிகை

**Family: Oleaceae, Jasmine (*Jasminum sambac*)**



தமிழ்நாட்டில் மதுரை மாவட்டத்தில் தான் மல்லிகை அதிகளவில் பயிராகிறது.

மல்லிகை செடி வகையை சார்ந்ததாகும். குண்டு மல்லி, காட்டுமல்லி, அடுக்குமல்லி, ஜாதிமல்லி என சில வகைகள் உள்ளன.

திருபல்லவனீச்சரம் பல்லவனேசுவரர், திருச்சிக்கல் நவநீதேஸ்வரர், திருஇலம்பயங்கோட்டூர் சந்திர சேகரர் ஆகிய தலங்களின் தலவிருட்சமாக மல்லிகை விளங்குகிறது.





# மந்தாரை

## Family: Caesalpiniaceae, Purple Orchid Tree (*Bauhinia purpurea)*

இந்தியாவைத் தாயகமாக கொண்ட மந்தாரை மரமானது பெரும்பாலும் தோட்டங்களிலும் சாலையோரங்களிலும் அழகுக்காக வளர்க்கப்படுகிறது. இதன் இலை இரண்டாக பிரிந்து காணப்படும். இலை இரவு நேரங்களில் மூடிக் கொள்ளும்.

மருத்துவ குணம் மிக்க இதன் இலைகள் வாதநோய், தசைபிடிப்பு, கால்வலி தொடர்புடைய நோய்களுக்கு நிவாரணம் அளிக்கிறது. மந்தாரையின் பூக்களில் மஞ்சள், வெள்ளை, இளம்சிவப்பு நிற வகைகளும் உண்டு.

திருக்கானப்பேர் (காளையார்கோயில்) காளையீசரர், திருத்திலதைப்பதி (பேரளம், திருவாரூர்) முத்தீசர் ஆகிய திருத்தலங்களில் தலமரமாக விளங்குவது மந்தாரை ஆகும். விதை மூலம் பெருக்கம் செய்யப்படுகிறது.





# மரமல்லி

**Family Bignoniacea, Indian Cork Tree (*Millingtonia hortensis*)**



மரமல்லி நறுமணத்துக்காகவும், அழகுக்காகவும் வீட்டுத் தோட்டங்கள் மற்றும் தெருக்களில் வளர்க்கப் படுகிறது.

இதற்கு இராமர் பாணம், குளவி, பன்னீர் பூ என்ற வேறு பெயர்களும் உண்டு. இதன் நறுமணத்தை வைத்து மரம் இருக்கும் இடத்தைக் எளிதாகக் கண்டறியலாம்.


மரம் மஞ்சள் நிறமானது. இதன் மலர்கள் கொத்துக் கொத்தாகப் பூத்திருக்கும் பார்ப்பதற்கு அழகாக இருக்கும். மிகவும் உயரமாக வளரக்கூடிய மரம்.

திரிசூலம் (காஞ்சிபுரம்) திரிசூலநாதர் திருத்தலத்தில் தலமரமாக விளங்குகிறது.

வேர்கள் மேல் நோக்கி செல்லும் இடமெல்லாம் புதிய செடிகளாக வளரும் இயல்புடையது. அதனால் இம்மரத்தை மதில் சுவர் ஓரமாக வைக்கவும், வளர்க்கவும் கூடாது.

# மருதம்

## Family: Combretaceae, Arjuna Tree *(Terminalia arjuna)*



இம் மரத்தை அர்சுனா மரம், நீர்மத்தி, நீர்மருது என்றும் அழைப்பார்கள். ஆற்றங்கரை ஓரங்களிலும், நீர் பாங்கானப் பகுதிகளின் கரைப் பகுதிகளிலும் அதிக அளவில் உயர்ந்து வளரும் பெரிய இலையுதிர் மரமகும்.

இது குறுகலான நீள்சதுர இலைகளையும் சாம்பல்நிற வழுவழுப்பான பட்டையையும் உடையது. ஆதிவாசிகள் இம் மரத்தண்டு பகுதியை வெட்டி அதில் வரும் நீரை குடிநீராகப் பயன்படுத்துவார்கள்.

மருத மரத்தின் இலை, பழம், விதை, பட்டை என அனைத்துமே மருத்துவக் குணம் கொண்டவை. இதய நோய் குணமாக மருதம்பட்டை நல்லதொரு மருந்தாகும்.

மருதமலை (கோயம்புத்தூர்) தண்டாயுதபாணி, திருவிடை மருதூர் (கும்பகோணம்) மகாலிங்கேஸ்வரர், அம்பர்மாகாளம் (நன்னிலம், திருவாரூர்) காளகண்டேசுவரர், திருஇடையாறு (திருக்கோயிலூர், விழுப்புரம்) இடையாற்றுநாதர் ஆகிய திருத்தலங்களில் மருதம் தலமரமாக விளங்குகின்றது. தண்ணீரில் ஊறவைத்த விதைகள் 7 முதல் 10 நாட்களில் முளைக்கத் தொடங்கும். அதனால் தான் ஆற்றங்கரை படுகைகள், ஏரிக்கரை ஓரம் இம் மரம் அதிக அளவில் காணப்படும்.

# மாதவி

**Family: Malpighiaceae, Hiptage (*Hiptage benghalensis*)**





திருமுருகன் பூண்டி முருகாவுடையார், திருத்தெளிச்சேரி, வடதிருமுல்லைவாயில் முதலிய திருத்தலங்களில் தலமரமாக விளங்குவது மாதவி மரமாகும்.

இதற்கு குருகு, குருக்கத்தி, கத்திகை என்ற பெயர்களும் உண்டு. இது நீண்டக் கூரிய கரும்பச்சை இலைகளை உடைய என்றும் பசுமையான பெரும் கொடியினம்.

கொத்தான நறுமணம் கமழும் மலர்களைப் பூக்கும் இக்கொடியினை பரவலாக வீடுகளில் வளர்த்து வருகின்றனர்.

இதன் மலர், இலை, பட்டை ஆகியன உடலுக்குக் குளிர்ச்சி தரும். இரத்தத்தினை சுத்தம் செய்யும்.

விதை மற்றும் ஒட்டு (Crafting) மூலம் பெருக்கம் செய்யப்படுகிறது.

# மா

**Family: Anacardiaceae, Mango (*Mangifera indica*)**



திருமாந்துறை, அன்னூர் (கோயம்புத்தூர்) வட்டமலை ஆண்டவர், திருமயிலாடு துறை மயூரநாதர், திருநாகைக்காரோணம் (நாகப்பட்டிணம்) காயாரோகணேஸ்வரர், திருக்கச்சியேகம்பம் (காஞ்சிபுரம்) ஏகாம்பரநாதர், திருஉசாத்தானம் (முத்துப்பேட்டை, திருவாரூர்) மந்திரபுரீஸ்வரர், அனுவாவி (கோயம்புத்தூர்) சுப்ரமணியர் கோவில் முதலிய தலங்களில் மா தலமரமாக விளங்குகிறது.

18 ம் தீர்த்தங்கரர் அரநாத சுவாமி இந்த மரத்தின் கீழ் தவம் புரிந்து ஞானம் பெற்றார். காஞ்சி ஏகாம்பரநாதர் கோவில் தலமரமாகிய மாமரத்தின் வயது 3500 ஆண்டுகளுக்கு மேற்பட்டது என இரசாயனப் பேராய்வுகள் உறுதி செய்துள்ளன.

இன்றும் பருவ காலங்களில் மாங்கனிகள் காய்க்கின்றன. அவைகள் நிவேதனமாகப் படைக்கப் படுகின்றன.

வீடுகளில் சுப காரியங்கள் நிகழும் பொழுது மாவிலைத் தோரணங்கள் கட்டுவது இன்றும் நடைமுறையில் உள்ளது. விதை மற்றும் ஒட்டு மூலம் பெருக்கம் செய்யப்படுகிறது.

# மாவிலங்கம்

**Family: Capparaceae, Sacred Garlic Pear (*Crateva religiosa*)**



திருச்சேறை (உடையார் கோயில்) செந்நெறியப்பர், திருநாட்டியத்தான்குடி (திருவாரூர்) செந்நெறியப்பர், கிணத்துகடவு (கோயம்புத்தூர்) சூலக்கல் மாரியம்மன் கோவில் முதலிய தலங்களில் தலமரமாக விளங்குவது மாவிலங்க மரமாகும்.

வில்வபத்திரி, வரணி, மாவிலங்கு, மாவிலங்கம், மாவிலங்கை, அதிசரணம், மாவிட்டை, மாவிளக்கப்பட்டை என வேறு பெயர்களும் உண்டு.


இந்தியாவில் பரவலாகக் காணப்படும் இம்மரம் தானாக வளர்கிறது. நடுத்தர உயரம் வளரும் இலையுதிர் மரம். இதன் கிளைகள் ஒழுங்கற்று வளரும்.


மரப்பட்டை சாம்பல் நிறத்திலும் வழவழப்பாக இருக்கும். இலை விரல் போன்ற மூன்று கூட்டிலை அமைப்பு. பிப்ரவரி, மார்ச் மாதங்களில் தளிர் இலை உண்டாகும். பூக்கள் இளமஞ்சள் நிறத்தில், இலைகள் உதிர்ந்திருக்கும் போது உண்டாகும். இம்மரம் வலிமையற்றது. பூச்சிகளால் எளிதில் தாக்கப்படும். மரப்பட்டை குடிநீர் சிறுநீர் கல்லடைப்பைப் போக்கும். இந்த மரத்தை பாதுகாக்கும் முயற்சியில் இந்திய தபால் நிறுவனம் 1981 ஆண்டு தபால் வில்லை ஒன்றை வெளியிட்டுள்ளது.

# முல்லை

**Family: Oleaceae, Jasmine (*Jasminum auriculatum*)**

முல்லை கொடி வகையைச் சார்ந்த இனம். திருக்கருகாவூர் (திருக் களாவூர், தஞ்சை) கற்பக புரீஸ்வரர், திருக் கருப்பறியலூர் (தலைஞாயிறு, நாகப்பட்டிணம்) குற்றம் பொறுத்தநாதர், தென்திரு முல்லைவாயில் (திருமுல்லை வாசல், நாகப்பட்டிணம்) முல்லைவன நாதர் முதலிய திருக் கோயில்களில் முல்லைக் கொடியும், திரு உசாத்தானம், திருஇலம் பையங்கோட்டூர் ஆகிய கோயில்களில் மல்லிகையும் (*Jasminum sambac)* திருக்கடவூரில் பிஞ்சிலம் (*Jasminum grandiflorum*) என்ற பெரு மல்லிகையும் தலமரங்களாக அமைந்துள்ளன.





# முருங்கை

**Family: Moringaceae, Drumstick Tree (*Moringa oleifera*)**



சாதாரணமாக வீட்டுத் தோட்டங்களில் காணப்படும் இம்மரம் மருத்துவப் பொக்கிஷம் என்றே சொல்ல வேண்டும். ஏன் எனில் இதன் இலை, பூ, காய், பட்டை, பிசின் என அனைத்தும் மருத்துவ குணமுடையவை.

இதன் மென்மையான ஈர்க்குகளில் கூட்டிலைகளையும் வெண்ணிற மலர்களையும் தக்கையான நீண்ட காய்களையும் சிறகுள்ள விதைகளையும் கொண்ட மரம்.

முருங்கை இலைக் காகவும், காய்க்காகவும் பதியன் மற்றும் விதை மூலம் அதிக அளவில் வளர்க்கப் படுகிறது. அனைத்து பருவங்களிலும் காய்க்கும் தன்மையுடையது. தண்ணீர் அதிகம் தேவையில்லை, வெப்பத்தைத் தாங்கி வளரக் கூடியது. அதிக குளிரில் வளராது.

இலையை அடிக்கடி பொரியல் செய்து சாப்பிட பித்த மயக்கம், மலச்சிக்கல், கண்நோய், கபம், மந்தம் தீரும். விருந்தீஸ்வரர் (வடமதுரை கோயம்புத்தூர்) தலத்தின் தலமரமாக விளங்குவது முருங்கையாகும்.

# மூங்கில்

**Family: Poaceae, Bamboo (*Dendrocalamus strictus*)**





மூங்கில் புல் வகையைச் சேர்ந்தது. இந்த வகையில் பெரிதாகவும், அதிக உயரமாக வளரும் தாவரம் மூங்கிலாகும். பச்சைத் தங்கம், ஏழைகளின் மரம் என அழைக்கப்படும் மூங்கில், மரங்கள் பட்டியலில் இருந்து தற்பொழுது நீக்கப்பட்டுள்ளது. இதனால் மூங்கில் வளர்ப்பில் விவசாயிகள் அதிக அளவில் ஈடுபட வாய்ப்புள்ளது.

தாவரங்களில் அதிகளவில் ஆக்சிஜன் உற்பத்தி செய்யக்கூடியது மூங்கில். மானாவாரி நிலங்கள், தரிசு நிலங்களில் மூங்கிலை உற்பத்தி செய்வதன் மூலமாகப் பொருளாதார முன்னேற்றம் அடையவும், காகித உற்பத்திக்கும், மற்றும் கரியமில வாயுவின் அடர்த்தியையும் குறைக்க உதவும்.

22ம் தீர்த்தங்கரர் நேமிநாத சுவாமிகள் இந்த மரத்தின் கீழ் தவம் புரிந்து ஞானம் பெற்றார். திருப்பாசூர் (கடம்பத்தூர், திருவள்ளூர்) வாசீஸ்வரர், திருநெல்வேலி, நெல்லையப்பர், திருவெண்ணெய் நல்லூர் தடுத்தாட்கொண்டநாதர் (இங்கு இறைவன் மூங்கில் புதரிலிருந்து தோன்றியதால் வேணுவனம் என்ற பெயரும் உண்டு), திருவேட்களம் (அண்ணாமலை நகர், சிதம்பரம்) பாசுபதேஸ்வரர் தலத்தின் தலமரமாக விளங்குவதும் மூங்கிலாகும். திருநெல்வேலியில் வேதசருமர் என்னும் அந்தணர் இறைவனுக்குத் திருவமுதுக்காக வைத்திருந்த நெல்லை வெள்ளங் கொள்ளாதவாறு மூங்கில் வேலியிட்டுக் காத்தமையால் நெல்வேலி என்னும் பெயர் ஏற்பட்டது. விதை மூலம் பெருக்கம் செய்யப்படுகிறது.

# வஞ்சி

**Family: Menispermaceae, Heart-leaved Moonseed (*Tinospora cardifolia*)**





இது சீந்தில் கொடி, ஆகாசவல்லி, அமிர்த வல்லி, சோமவல்லி, சாகாமூலி என்ற பல பெயர்களாலும் குறிப்பிடப் படுகின்றது.

தமிழ் நாட்டில் எல்லா மாவட்டங்களிலும் வளர்கிறது. வறட்சியைத் தாங்கக்கூடியது. ஏதாவது ஒரு மரத்தைப் பற்றிக் கொண்டு ஒட்டுண்ணியாக வளரக்கூடியது.

இந்த கொடி கசப்பு சுவை கொண்டது, வெற்றிலையை போன்ற இதன் இலைகள், தண்டு, வேர் மருத்துவ குணமுடையவை.

திருக்கருவூர் ஆனிலை (கருவூர், திருச்சி) பசுபதீஸ்வரர் எனும் தலத்தில் தலவிருட்சமாக விளங்குவது வஞ்சிக் கொடியாகும்.

இச் கொடி விதை, தொங்கும் வேர் (Aerial roots) மற்றும் தண்டு மூலம் பெருக்கம் செய்யப்படுகிறது

# வன்னி

## Family: Fabaceae, Indian Mesquite (*Prosopis spicigera)*



வறண்ட இடங்களிலும் அதிக வெப்பத்தை தாங்கி வளரும் இயல்புடையது வன்னி மரமாகும். வன்னி மரத்தின் புனிதம் பற்றி ரிக் வேதம், இராமாயணம் மற்றும் மகாபாரதத்தில் குறிப்புகள் உள்ளன.


யாகங்களில் வன்னி குச்சிகளை பயன்படுத்துவது இன்றும் நடைமுறையில் உள்ளது. இதன் அனைத்துப் பகுதிகளுமே பயன்படுவதால், 'கற்பகதரு' என்றும் சொல்வார்கள்.


திருப்பாண்டிகொடுமுடி (ஈரோடு) மகுடேசுவரர், தலத்தில் 2000 ஆண்டுக்கும் பழமையான வன்னிமரம் உள்ளது. விளாங்குறிச்சி (கோயம்புத்தூர்) மீனாட்சி சுந்தரேஸ்வரர், அதிராம்பட்டிணம் (தஞ்சாவூர்) அபயவரதேஸ்வரர், திருவல்லிக்கேணி (சென்னை) தீர்த்தபாலீஸ்வரர், வெள்ளலூர் (கோயம்புத்தூர்) தேனீஸ்வரர், திருமுதுகுன்றம் (விருத்தாசலம்) பழமலை நாதர், திருவான்மியூர் (சென்னை) மருந்தீசர், மேலைத் திருக்காட்டுப்பள்ளி, திருப்பூந்துருத்தி, குமார வயலூர் (திருச்சிராப்பள்ளி) முதலிய முப்பதுக்கும் மேற்பட்ட திருக்கோயில்களில் தல மரமாக வன்னி விளங்குகின்றது.

வில்வத்திற்கு அடுத்தபடியாக மிகுதியான கோயில்களில் தலமரமாக உள்ளது வன்னியேயாகும். இம் மரம் விதை மூலம் பெருக்கம் செய்யப்படுகிறது. திருச்சி, கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டத்தைச் சார்ந்த வன்னிய சமூகத்தினர் வன்னி மரத்தை புனிதமரமாகக் கருதுகின்றனர். எல்லா மரத்தையும் கரையான் அரிக்கும். ஆனால் இதை மட்டும் கரையான் தொடாது. நெருங்கவே முடியாது. இந்த மரத்தினுடைய அமைப்பு அவ்வளவு வலிமையானது ஆகும்.

# வாகை

## Family: Fabaceae, Siris Tree (*Albizia lebbeck*)





இது உயரமாக வளரக் கூடிய இலையுதிர் பெருமரமாகும். இலைகள் இரட்டைச் சிறகமைப்பும், நீள்வட்ட வடிவிலும் இருக்கும், இரவு நேரங்களில் இலைகள் மூடிக் கொள்ளும்.

மன்னர்கள் காலத்தில் வெற்றியின் அடையாளமாக வாகை மரத்தின் மலர்களைத் தான் சூடுவார்கள். உலர்ந்த இலையில் நைட்ரஜன் சத்து உள்ளதால், நிலத்துக்கு தழையுரமாகவும், மரம் வீட்டு உபயோகப்பொருள் செய்யவும் பயன் படுகிறது. வாகை மரத்தின் பிசினி, மரப் பட்டை, பூ, விதை, இலை என அனைத்தும் மருத்துவ குணங்கள் உள்ளவை.

7ம் தீர்த்தங்கரர் சுபார்சுவநாத சுவாமி இந்த மரத்தின் கீழ் தவம் புரிந்து ஞானம் பெற்றார். திருவாழ்கொளிப் புத்தூர் (திருவாழப்புத்தூர், மயிலாடுதுறை) மாணிக்கவண்ணர், பொள்ளாச்சி மண்கொண்டேஸ்வரர் திருத்தலங்களின் தலமரமாக விளங்குவது வாகை மரமாகும். விதை மூலம் பெருக்கம் செய்யப்படுகிறது.

# வால்மிளகு

**Family: Piperaceae, Tailed Pepper (*Piper cubeba*)**

வால்மிளகு கொடி வகையை சார்ந்ததாகும், காய்ந்த மிளகில் காம்பு இருப்பதால் இதை வால் மிளகு என்பர்.

இக்கொடி வெப்ப மண்டலப் பகுதியில் மிக நன்றாக வளரும். முக்கியமாக தென்னிந்திய பகுதிகளில் பயிர் செய்யப்படுகிறது.

வால்மிளகு சித்த மற்றும் ஆயுர்வேத மருத்துவத்தில் அதிக அளவில் பயன்படுத்தப்படுகிறது.

இதன் காரத்தன்மை பசியினைத் தூண்டுவது மற்றும் உடல் வெப்பத்தை அதிகரிக்கும் குணங்களைக் கொண்டுள்ளது.

திருவூறல் (தக்கோலம், வேலூர்) உமாபதீசுவரர் திருத்தலத்தின் தலமரமாக விளங்குவது வால்மிளகு கொடி ஆகும்.





# வாழை

## Family: Musaceae, Banana (*Musa paradisiaca)*



முக்கனிகளில் ஒன்றான வாழை எல்லா காலங்களிலும் கிடைக்கும் கனியாகும். மா, பலா மரங்கைளக் காட்டிலும் வாழை மரம் அதிக பயன்தரக்கூடியது.

வாழையின் இலை, பூ, காய், தண்டு, பட்டை, நார் என அனைத்தும் உபயோகம் உடையவை.

காய்ந்த வாழை இலையானது தொன்னை செய்யப் பயன்படும். ஒரு வாழையை நட்டால் போதும் வாழையடி வாழையாக அதன் குலம் தழைக்கும்.

சிறுநீரகக் கல்லுக்கு வாழைத்தண்டு சாறு உகந்தது போல வாழையிலையில் உள்ள பச்சையம் நோய் எதிர்ப்பு சக்தியாகவும் விளங்குகிறது. இலையின் பச்சயத்தில் உள்ள Polyphenol சாப்பாட்டில் கலந்து அதிலுள்ள உயிர் சத்து கால்சியம், சிட்ரிக் அமிலம், மற்றும் கரோட்டின் நமக்கு கிடைக்கிறது.

திருப்பழனம் (கதலிவனம், திருவையாறு) ஆபத்சகாயர், திருத்தருமபுரம் (மயிலாடுதுறை) தரும்புரீஸ்வரர், திருக்குடவாயில் (குடவாசல், திருவாரூர்) கோணேஸ்வரர், திருப்பைஞ்ஞீலி (பைஞ்ஞீலி, திருச்சி) நீலகண்டேஸ்வரர், திருக்கழுக்குன்றம் (செங்கல்பட்டு) வேதகிரீஸ்வரர் முதலிய தலங்களில் தலமரமாக வாழை விளங்குகின்றது.

# விடத்தளா

**Family: Mimosaceae, Sickle Bush (*Dichrostachys cinerea*)**



இலையுதிர்க் காடுகளிலும் வறண்ட காடுகளிலும், மலைச் சரிவுகளிலும் பரவலாகக் காணப்படும் முட்களை உடைய சிறு மரம். எதிரமைப்பு உடைய இலை இருசிறகாக அமைந்த கூட்டிலை. சிறிய பூக்கள் நெருக்கமாகக் குஞ்சம் போல் அமைந்திருக்கும். குஞ்சத்தின் மேல் பாதிப் பூக்கள் மஞ்சளாகவும் அடிப்பகுதி சிவப்பாகவும் இருக்கும்.

காய் கரும் பழுப்பு நிறத்தில் தகடு போல் இருக்கும், முற்றிய நிலையில் வளைந்து சுருண்டணவாக மாறும். விதை மூலம் பெருக்கம் செய்யப்படுகிறது.

கோவை அருகில் உள்ள ஒத்தகால் மண்டபம், குச்சனூர் சனீஸ்வர கோவில் மற்றும் பல சனீஸ்வர கோவில்களில் தலமரமாக உள்ளது. இந்துமத வழிபாட்டுத் தலங்களில் அமைக்கப்பட்டிருக்கும் நவக்கிரகங்களில் ஒன்றாகவும், சில வழிபாட்டுத் தலங்களில் துணைக் கோவிலாகவும் கொண்டு எழுந்தருளியிருக்கும் சனீஸ்வர பகவான் தமிழகத்தில் தனக்கென தனிக் கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஒரே இடம் குச்சனூர்தான்.

# வில்வம்

**Family: Rutaceae, Bael (*Aegle marmelos*)**



வில்வத்தை கூவிளம், கூவிளை, சிவத் துருமம் என்றும் அழைப்பார்கள். கூட்டிலைகள் மாற்றடுக்கில் அமைந்திருக்கும். மூன்று ஐந்து ஒன்பது என கூட்டிலைகள் மாறுபடும். அனைத்து இடங்களிலும் மிகவும் உயரமாக வளரக்கூடிய இலையுதிர் மரமாகும்.

வில்வம் ஒரு கற்பக மூலிகையாகும். இலை, பூ, பிஞ்சி, பழம், பட்டை, பிசின், வேர் ஆகியவை மருத்துவப் பயனுடையவை. இதன் பூ வாய் நாற்றத்தைப் போக்கும். விஷத்தை முறிக்கும். பழம் விஷ நோய்களைத் தடுக்கும் மலக்கட்டை ஒழிக்கும், நாக்கு புண்களை ஆற்றும். உடல் அழகையும் வலிமையும் வன்மையையும் உண்டு பண்ணும்.

பெருமாள் கோயில்களில் தாயாருக்குத் துளசியாலே அர்ச்சனை செய்வர். கொழுமம் (உடுமலைப்பேட்டை) கல்யாணப்பெருமாள் கோயிலில் தாயாருக்கு வில்வத்தால் அர்ச்சனை செய்கின்றனர். சைவமும் வைணவமும் வேறில்லை என்ற கருத்தின் அடிப்படையில் இவ்வாறு செய்கின்றனர்.

10ம் தீர்த்தங்கரர் சீதளநாத சுவாமி இந்த மரத்தின் கீழ் தவம் புரிந்து ஞானம் பெற்றார். கைசாலபட்டி (தேனி) கைசாலநாதர், சேலம் வீரபத்திரர் கோவில், திருக்களம்பூர், (திருவாரூர்) வில்வ வனேசுவரர், மாடையம்பதி (மாடம்பாக்கம்) தேனுபுரீஸ்வரர், கூடலையாற்றூர் (கடலூர்) நெறிகாட்டு நாயகர், திருவலம் (வேலூர்) வில்வநாதேஸ்வரர், சிங்கிரிகுடி (கடலூர்) நரசிம்மர், கொளத்தூர் (சென்னை) சோமநாதீஸ்வரர், போன்ற 30 க்கும் மேற்பட்ட கோவில்களில் வில்வம் தலமரமாக உள்ளது.

வில்வமர நிழல், காற்று இவற்றிலும் மருத்துவ சக்தி இருக்கிறது. இம் மரம் விதை மூலம் இனப் பெருக்கம் செய்யப் படுகிறது.

# விழுதி

**Family: Capparaceae, Indian Cadaba (*Cadaba indica*)**



வீழி என்பதும் விழுதியைக் குறிப்பதே. இது தனியிலைகளை கொண்டது.

மங்கலான வெண்ணிற பூக்களையும் செந்நிறப் பழங்களையும் உடைய முள்ளில்லாத சிறுசெடியாகும்.

இதன் இலை, காய், வேர் முதலியன மருத்துவப் பயன் கொண்டவை.

திருவீழிமிழலை (மிழலை, தஞ்சாவூர்) நேத்திரார்ப்பணேசுவரர் என்னும் தலத்தின் தலமரமாக விளங்குவது விழுதி ஆகும். தலத்தின் பெயர் தலமரத்தால் பெற்றதாகும்.





# விளா

**Family: Rutacee, Wood Apple *(Feronia elephantum)***



தமிழகம் எங்கும் வறண்ட காடுகளிலும், இலையுதிர் காடுகளிலும் வளரும் பெருமரமாகும். இதற்கு கருவிளம் என்ற பெயரும் உண்டு.

ஆப்பு வடிவக் கூட்டிலை. மணமுள்ள சிறிய வெளிர் சிவப்பான மலர்கள் கொத்தாகப் பூக்கும். இதன் காய்கள் பார்ப்பதற்கு வில்வக்காயைப் போன்று உருண்டையாக இருக்கும்.

கெட்டியான ஓட்டுடன் கூடிய பழங்கள் துவர்ப்பும், புளிப்பும் உடையது. நறுமணமுடையது. சர்க்கரை சேர்த்துப் பிசைந்து சாப்பிட சுவையாக இருக்கும். இதன் இலை, பட்டை, பழம், பிசின் ஆகியன மருத்துவப் பயனுடையவை. தமிழகமெங்கும் கனிகளுக்காக தோட்டங்களில் வளர்க்கப்படுகின்றது. பட்டை வாசனையுடையது உடலுக்குக் குளிர்ச்சி தருவதோடு பித்தத்தை சமநிலைப்படுத்தும்.

திருநின்றவூர் இருதயாலீஸ்வரர், லட்சுமிபுரீஸ்வரர் சாஸ்திரம்பாக்கம் (சிங்கபெருமாள் கோவில், சென்னை) வடவைத்தியநாதர், திருக்கோயிலின் தலமரமாகவும், திருகாறாயில் திருக்கோயிலின் தலமரங்களில் ஒன்றாக விளங்குவதும் விளா மரம் ஆகும். விசாக நட்சத்திரத்தின் விருட்சமரம் விளா மரம் ஆகும். இம்மரம் விதை மூலம் பெருக்கம் செய்யப்படுகிறது

# விராலி

**Family: Sapindaceae, Hop Bush (*Dodonaea viscosa*)**

விராலி, மலைப்பாங்கான இடங்களில் அதிகம் காணப்படும். இது வெப்பத்தை நன்கு தாங்கி வளரும் மரமாகும்.

இந்தச் செடி பல்வேறு மருத்துவ குணங்களை கொண்டதாக விளங்கி வருகிறது. இதன் சாற்றை பயன்படுத்தி பாதரசத்தை மாற்றக் கூடிய வேதிப் பொருளாக பயன்படுத்தி வந்துள்ளனர்.

இது ஆப்பிரிக்கா, அமெரிக்கா, தென் ஆசியா மற்றும் ஆஸ்திரேலியாவின் வெப்பமண்டல, மிதவெப்ப மண்டலப் பகுதிகளில் பரவியுள்ளது.

இதன் இலையை மென்று சிறிது நேரம் வாயில் வைத்திருப்பதால் பல்வலி, பல் கூச்சம் ஆகியவை நீங்குகிறது. காய்ந்த கிளைகளுடன் கூடிய இலை கூறை போடப் பயன்படுகிறது.

விராலிமரம் அதிகமாக காணப்பட்டதால் விராலிமலை எனப் பெயர் பெற்றது. விராலிமலை சண்முகநாதன் கோயிலின் தலமரமும் இதுவேயாகும்.





# வெள்வேல்

**Family: Mimosaceae, White Bark Acacia (*Acacia leucophloea*)**



பெருமர வகையைச் சார்ந்த வெள்வேல் மரம் ஈரிறகு வடிவக் கூட்டிலை, மரத்தின் வெளிப்பகுதி வெண்ணிறமாகவும், உட்புறம் மஞ்சளாகவும் இருக்கும்.

இதன் இலை. பட்டை, பழம், வேர், பிசின் ஆகிய அனைத்தும் மருத்துவப் பயனுடையவை.

திருவேற்காடு தேவிகருமாரியம்மன் என்னும் தலத்தில் தல விருட்சமாக விளங்குவது வெள்வேல் மரமாகும்.

தலத்தின் பெயர் வேல்காடு என மரத்தின் பெயராலேயே அமைந்துள்ளது.

விதை மூலம் பெருக்கம் செய்யப்படுகிறது. வெள்வேல், கருவேல் இரண்டும் தோட்டங்களில் வேலிக்காக வளர்க்கப்படும் மரங்களாகும்.

காடுகளிலும், தரிசுநிலங்களிலும் அதிக அளவில் காணலாம்.

# வேம்பு

**Family: Meliaceae, Neem (*Azadirachta indica*)**



வேப்ப மரம் இந்தியா, இலங்கை, பர்மா போன்ற நாடுகளில் வளரும் மிகவும் பயனுள்ள ஒரு மரம். இதன் மருத்துவ பண்புகள் கருதி இதனை ஒரு மூலிகை மரம் என்றும் கற்பகவிருட்சம் என்றும் கூறலாம்.

வேம்பு அனைத்து மண்ணிலும் வளரக்கூடியது. ஆனால் அதிக குளிர் பிரதேசத்தில் வளராது. கூர் நுனிப் பற்களுள்ள சிறகுக் கூட்டிலைகளையும், வெண்ணிற மணமுள்ள சிறு சிறு பூக்களையும், முட்டை வடிவ விதைகள் எண்ணெய் சத்து உடையது.

கோடைகாலத்தில் பூக்க ஆரம்பிக்கும். வேப்பம் பூவில் இருந்து வேப்பம் பூ வடகம், பச்சடி, ரசம் என்பவை செய்யலாம். வேப்ப எண்ணெய் மருத்துவத்தில் பயன்படுகின்றது. வேப்பம்புண்ணாக்கு செடியின் வேர்புழுக்களை கட்டுப்படுத்தும். வேப்பங் குச்சி பல் துலக்க பயன்படுகிறது. சில வேப்ப மரத்திலிருந்து பால்வழிவதைக் காணலாம். இந்த பாலானது பிசினின் மறு வடிவமாகும்.

வேப்ப விதை மற்றும் வேப்ப எண்ணையை தெளித்து வர, கொசுத்தொல்லை நீங்கும், வேம்பு இலையை அரைத்துக் கட்டி வர ஆறாத ரணம், பழுத்து உடையாத கட்டி, வீக்கம் தீரும், பொன்னுக்கு வீங்கி, பித்த வெடிப்பு, பருவு, அம்மைக் கொப்புளம் குணமாகும். திருக்குடந்தைக்காரோணம், புள்ளிருக்குவேளூர் என்னும் வைத்தீஸ்வரன் கோவில், திருவாட்போக்கி என்னும் ஐயர் மலை ஆகிய திருக்கோவில்களில் வேம்பு தலமரமாக உள்ளது. விதை மூலம் பெருக்கம் செய்யப்படுகிறது. இதை தவிர பெரும்பாலான அம்மன் கோவில்களிலும் இம்மரம் வழிபாட்டு மரமாக உள்ளது.

# வேங்கை

**Family: Fabaceae, Indian Kino Tree (*Pterocarpus marsupium*)**



வேங்கை மரமானது தமிழகமெங்கும் இலையுதிர் காடுகளிலும், பசுமை மாறாக் காடுகளிலும் சுமார் 30 மீ. உயரம் வரை வளரும் பெரியமரம். 5 முதல் 7 வரையான சிற்றிலைகள் மாற்றடுக்காக அமைந்து இருக்கும். மஞ்சள் நிற மலர்கள் ஜூன், ஜூலை மாதங்களில் பூக்கும். காய்கள் வட்டவடிவில் ஒன்று அல்லது இரண்டு கொட்டைகள் கொண்டு செம்பழுப்பு நிறத்தில் இருக்கும்.

மரத்தின் அடிமரக் கட்டையிலிருந்து பளபளப்பான கருஞ்சிவப்பான திரவம் வடித்தெடுக்கப்படும் கோந்தானது இரத்தக் கசிவு, காய்ச்சல், குடற்புண் ஆகிய நோய்களை குணமாக்கும்.

வேங்கை மரத்து பால் சிறுகுழந்தைகளின் நெற்றியில் பொட்டு வைக்கும் பழக்கம் கிராமங்களில் இன்றும் உள்ளது. விதை மூலம் பெருக்கம் செய்யப் படுகிறது.

4ம் தீர்த்தங்கரர் அபிநந்தனநாத சுவாமி இந்த மரத்தின் கீழ் தவம் புரிந்து ஞானம் பெற்றார். வள்ளிமலை (வேலூர்), வேளிமலை ஆகியதலங்களில் வேங்கை தலமரமாக உள்ளது.

# நட்சத்திரங்களும் மரங்களும்

| | Star | Tamil Name | English Name<br>*Botanical Name* |
|---|---|---|---|
| 1 | அஸ்வினி | எட்டி | Snakewood<br>*Strychnos nux-vomica* |
| 2 | பரணி | நெல்லி | Indian Gooseberry<br>*Phyllanthus emblica* |
| 3 | கார்த்திகை | அத்தி | Country Fig<br>*Ficus glomerata* |
| 4 | ரோகிணி | நாவல் | Black Plum<br>*Syzygium cumini* |
| 5 | மிருகசீருஷம் | கருங்காலி | Cutch Tree<br>*Acacia catechu* |
| 6 | திருவாதிரை | செங்கருங்காலி | Red-Cutch Tree<br>*Acacia chundra* |
| 7 | புனர்பூசம் | மூங்கில் | Bamboo<br>*Dendrocalamus strictus* |
| 8 | பூசம் | அரசு | Peepul Tree<br>*Ficus religiosa* |
| 9 | ஆயில்யம் | புன்னை | Alexandrian Laurel<br>*Calophyllum inophyllum* |
| 10 | மகம் | ஆல் | Banyan<br>*Ficus benghalensis* |
| 11 | பூரம் | பலாசு (அ) பொரசு | Flame of the Forest<br>*Butea monosperma* |
| 12 | உத்திரம் | அலரி | Oleander<br>*Nerium odorum* |

| | | | |
|---|---|---|---|
| 13 | ஹஸ்தம் | அத்தி | Country Fig<br>*Ficus glomerata* |
| 14 | சித்திரை | வில்வம் | Holy Fruit Tree<br>*Aegle marmelos* |
| 15 | சுவாதி | மருது | Arjun Tree<br>*Terminalia arjuna* |
| 16 | விசாகம் | விளா | Wood Apple<br>*Limonia acidissima* |
| 17 | அனுஷம் | மகிழம் | Bullet Wood<br>*Mimusops elengi* |
| 18 | கேட்டை | பராய் | Sandpaper Tree<br>*Streblus asper* |
| 19 | மூலம் | ஆச்சா | Acha Tree<br>*Hardwickia binata* |
| 20 | பூராடம் | வஞ்சி | Indian Willow<br>*Salix tetrasperma* |
| 21 | உத்திராடம் | பலா | Jack Fruit<br>*Artocarpus heterophyllus* |
| 22 | திருவோணம் | எருக்கு | Swallow Wort<br>*Calotropis gigantea* |
| 23 | அவிட்டம் | வன்னி | Indian Mesquite<br>*Prosopis spicigera* |
| 24 | சதயம் | கடம்பு | Wild Cinchona<br>*Anthocephalus cadamba* |
| 25 | பூரட்டாதி | மா | Mango<br>*Mangifera Indica* |
| 26 | உத்திரட்டாதி | வேம்பு | Neem<br>*Azadirachta indica* |
| 27 | ரேவதி | இலுப்பை | Butternut Tree<br>*Madhuca longifolia* |

## மேற்கோள் நூல்கள்

| | |
|---|---|
| *ஜெ. ஸ்ரீசந்திரன்* | ஸ்ரீ புராணம்<br>நல்லறம் பதிப்பகம் |
| *ஆர்.எஸ். நாராயணன்* | வாழ்வு தரும் மரங்கள் (2009) |
| *வ.த. இராமசுப்பிரமணியம்* | திரு ஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம் (2003)<br>மூலமும் தெளிவுரையும், 6–தொகுதிகள்<br>வர்த்தமானன் பதிப்பகம். சென்னை. |
| *க. ரத்னம்* | தமிழ்நாட்டு மூலிகைகள் (2003)<br>மெய்யப்பன் பதிப்பகம். |
| *குப்புசாமி* | மூலிகைவளம்<br>http://mooligaivazam-kuppusamy.blogspot.in/ |
| *முனைவர் மா. குணசேகரன்* | ஸ்தல விருட்சங்கள் பற்றிய<br>முனைவர் பட்ட ஆய்வுத் தொகுப்பு (2010)<br>பாரதியார் பல்கலைக்கழகம், கோவை. |



## படங்கள் தந்து உதவியவர்கள்

***Eflora india Google Group***

***Mr. Dinesh Valke*** **(flower 49,59,60,63) (fruit 64,66,69,83,86,92,93, 95,101,102,107,109,112,115,120,125,127)**

***Mr. J.M.Garg*** **(cover page Ficus fruit, 53)**

***Mr. N.Arun Kumer*** **(Cover page Ficus tree, 54)**

***Dr. K. Ilangovan*** **(82, 96)**

***Mr. A. Lakshmikanthan*** **(81, 92, 99, 111, 124)**

***Ms. Lalithamba Avadhanam*** **(Flower 61, 78, 85, 102, 105) (114, 118)**

***Mr . Anurag Sharma*** **(97)**

***Mr. Ahmad Fuad*** **(80)**

***Mr. R.K. Sinhal*** **(45)**

***Mr. Vijayasankar Raman*** **(fruit 68) (79)**

**Mr. Kamran Ahmed. (Jackfruit flower - 93)**

***Mr. B. Rathinasabapathy*** **(Other photos)**

# Index: *Scientific Name*


| தாவரவியல் பெயர் | பக்கம் | தாவரவியல் பெயர் | பக்கம் |
|---|---|---|---|
| *Acacia leucophloea* | 127 | *Canna indica* | 63 |
| *Aegle marmelos* | 123 | *Canthium parviflorum* | 67 |
| *Aquilaria agallocha* | 45 | *Calotropis gigantea* | 58 |
| *Alangium salvifolium* | 50 | *Citrus limon* | 59 |
| *Anthocephalus cadamba* | 60 | *Citrus medica* | 87 |
| *Aerva lanata* | 79 | *Cocos nucifera* | 84 |
| *Albizia lebbeck* | 119 | *Couroupita guianensis* | 88 |
| *Artocarpus heterophyllus* | 93 | *Crataeva religiosa* | 113 |
| *Atalantia monophylla* | 71 | *Cyperus rotundus* | 72 |
| *Azadirachta indica* | 128 | *Datura metel* | 57 |
| *Bauhinia purpurea* | 108 | *Dendrocalamus strictus* | 116 |
| *Bauhinia racemosa* | 51 | *Diospyros ebenum* | 65 |
| *Bauhinia tomentosa* | 68 | *Dichrostachys cinerea* | 122 |
| *Bombax ceiba* | 73 | *Dodonaea viscosa* | 126 |
| *Borassus flabellifer* | 96 | *Erythrina indica* | 61 |
| *Butea monosperma* | 102 | *Ervatamia coronaria* | 86 |
| *Cadaba indica* | 124 | *Euphorbia antiquorum* | 76 |
| *Calamus rotang* | 99 | *Excoecaria agallocha* | 82 |
| *Calophyllum inophyllum* | 104 | *Feronia elephantum* | 125 |
| *Commiphora caudata* | 69 | *Ficus benghalensis* | 53 |
| *Cassia fistula* | 74 | *Ficus racemosa* | 47 |

| தாவரவியல் பெயர் | பக்க எண் | தாவரவியல் பெயர் | பக்க எண் |
|---|---|---|---|
| *Ficus religiosa* | 48 | *Piper cubeba* | 120 |
| *Ficus tinctoria* | 66 | *Pongamia glabra* | 100 |
| *Guettarda speciosa* | 95 | *Prosopis spicigera* | 118 |
| *Hiptage benghalensis* | 111 | *Pterocarpus marsupium* | 129 |
| *Jasminum sambac* | 107 | *Phyllanthus emblica* | 91 |
| *Jasminum auriculatum* | 114 | *Polygala chinensis* | 105 |
| *Imperata cylindrica* | 80 | *Ricinus cummunis* | 52 |
| *Macaranga peltata* | 101 | *Santalum album* | 77 |
| *Madhuca longifolia* | 56 | *Saraca asoca* | 46 |
| *Magnolia champaca* | 75 | *Solanum xanthocarpum* | 62 |
| *Mangifera indica* | 112 | *Stereospermum suaveblens* | 97 |
| *Millingtonia hortensis* | 109 | *Streblus asper* | 92 |
| *Mimusops elengi* | 106 | *Strychnos potatorum* | 85 |
| *Moringa oleifera* | 115 | *Syzygium cumini* | 89 |
| *Morinda tinctoria* | 90 | *Tamarindus indica* | 103 |
| *Musa paradisiaca* | 121 | *Tarenna asiatica* | 70 |
| *Nerium indicum* | 49 | *Terminalia arjuna* | 110 |
| *Nyctanthes arbor-tristis* | 94 | *Terminalia chebula* | 64 |
| *Ochna obtusata* | 78 | *Tinospora cardifolia* | 117 |
| *Ocimum sanctum* | 83 | *Wrightia tinctoria* | 98 |
| *Pandanus odoratissimus* | 81 | *Ziziphus mauritiana* | 55 |

## குறிப்புகளுக்காக...

குறிப்புகளுக்காக...